வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 17.06.2023 சனிக்கிழமை இதழ் : 190 பக்கங்கள் : 16

# தமிழ் எம். பிக்களை முடிந்தால் கைது செய்யுங்கள் பார்ப்போம்

## சரத் வீரசேகரவுக்கு செல்வம் எம். பி. சவால்



வவுனியா, ஜூன் 17

**முடிந்தால் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து காட்டுங்கள். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறையில் அடைக்க சொல்வதற்கு சரத் வீரசேகரவுக்கு என்ன உரிமை இருக்கிறது? முடிந்தால் அதை செய்து பார்க்கட்டும் - இவ்வாறு சவால் விட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன்.**

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர கடந்த காலங்களில் பல கருத்துகளைக் கூறியுள்ளார். குறிப்பாக, தமிழ் பிரதேசங்களில் நடைபெறுகின்ற அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று சொல் லியிருக்கின் 15



## இந்தியா - யாழ். கப்பல் சேவை தற்போது சாத்தியம் இல்லை!

### அமைச்சர் நிமல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

இந்தியா - யாழ்ப்பாணம் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை நடத்தும் சாத்தியக்கூறு இந்த ஆண்டு இறுதிவரை இல்லை என்று விமான சேவைகள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சென்னையிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு பயணிகளுடன் முதல் கப்பல் நேற்று வெள்ளிக்கிழமை வந்தது. இந்தக் கப்பலை வர வேற்ற 15

## அரசியல் இலாபம் கருதி முடிவெடுக்க அனுமதியோம்

### குருந்தூர்மலை விவகாரத்தில் ரணிலுக்கு கூறியது பெரமுன

கொழும்பு, ஜூன் 17

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத சிறந்த தீர்மானத்தை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். அரசியல் இலாபத்தைக் கருத்தில் கொண்டு தொல்பொருள் விவகாரத்தில் தீர்மானம் எடுக்க இடமளிக்க முடியாது என்று பொதுஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் 15

## வாகனங்கள் இறக்குமதிக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது!

### நிதி இராஜாங்க அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

தற்போதைய நிலையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்க முடியாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த நாட்களில் அத்தியாவசிய எரிபொருள் கொள்வனவுக்காக பெற்றோலிய கூட்டுத்தாபனம் 15

## யாழ். விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வது தொடர்பாக விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை ஆராயப்பட்டது.

விமான நிலையத்தை வடக்கு பக்கமாக விரிவாக்கம் 15

## குருந்தூர்மலை விவகாரம்: அடையாள தூண்களை அகற்ற எவருக்கும் உரிமை இல்லை!

### சரத் வீரசேகர சொல்கிறார்



கொழும்பு, ஜூன் 17

குருந்தூர் மலையில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகள் மற்றும் அடையாளமிடப்பட்ட துண்களை அகற்ற எவருக்கும் உரிமை இல்லை. 15

## வரியில் திருத்தம் இன்றேல் தொழில்சங்கப் போராட்டம்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 17

வாக்குறுதி அளித்த தன் பிரகாரம் இந்த மாதத்துக்குள் அரசாங்கம் வரிக் கொள்கையில் திருத்தம் மேற்கொள்ளாவிட்டால் அடுத்த வாரத்தில் பெரும் தொழில் சங்க போராட்டத்தை நடத்துவோம் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரசாங்கத்தின் வரிக் கொள் கையில் ஜூன் மாதத்துக்குள் திருத்தம் மேற் 15

## ஜெயவர்தனபுர பல்கலையில் யாழ். மாணவனின் சடலம் மீட்பு!

### முழுவிசாரணை கோரும் உறவினர்கள்

கொழும்பு, ஜூன் 17

கொழும்பு - சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் மூன்றாம் வருட மாணவன் சடலமாக மீட்கப்பட்டார். தூக்கில் தொங்கிய நிலையில் அவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டது.

ஊர்காவற்துறை நாரந்தனை வடக்கை சேர்ந்த விக்னேஸ்வரன் அபிநயன் (வயது 23) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என்று மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

பொரலஸ்க முவை - கட்டு 15

## ஹன்ரர் வாகனம் மோதியதில் மகளும் தாயும் நசியுண்டு பலி!

### வவுனியாவில் நேற்று சோகம்



வவுனியா, ஜூன் 17

பாடசாலை பேருந்துக்காக வீதியோரமாகக் காத்திருந்த தாயாரையும் மகளையும் ஹன்ரர் வாகனம் மோதியதில் இருவரும் சம்பவ இடத்திலேயே நசியுண்டு பலியாகினர்.

அதிவேகமாகப் பயணித்த ஹன்ரர் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததே 15

## சென்னையிலிருந்து 100 பயணிகளுடன் நேற்று முதல் கப்பல் யாழ். வந்தது!



யாழ்ப்பாணம், ஜூன் 17

இந்தியாவிலிருந்து சுமார் நூறு பயணிகளுடன் முதல் பயணிகள் கப்பல் நேற்று வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வருகை தந்தது.

இந்தியாவிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்கும் பரீட்சார்த்த முயற்சியாகவே நேற்று இந்தக் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# கனடாவின் தீர்மானத்துக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் இலங்கை?

கொழும்பு, ஜூன் 17

**இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்று கனடா பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியமைக்கு எதிராக வெளிவிவகார அமைச்சு பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற திட்டமிட்டுள்ளது.**

வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையிடம் ஆலோசனையை பெற்ற பின்னர் எவ்வாறான தீர்மானத்தை கொண்டுவருவது என தீர்மானிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான மேற்பார்வை குழுவின் சமீபத்தைய கூட்டத்தில் சமீபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி கனடாவுக்கு எதிராக தீர்மானத்தை கொண்டுவருவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சர் எடுப்பாரா என்றும் அந்த நாளிதழ் எழுப்பிய கேள்விக்கே வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது என்ற குற்றச்சாட்டை வெளிவிவகார அமைச்சு திட்டவட்டமாக நிராகரிக்கின்றது என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பௌத்த சங்கத்துடன் பேசியபிறகு துறவற வயது தொடர்பில் தீர்மானம்!

## அமைச்சருக்கு மகாநாயக்கர்கள் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 17

சிறுவர்களை துறவுக்கு இணைத்துக் கொள்ளும் குறைந்தபட்ச வயதெல்லை தொடர்பில் பௌத்த சங்க சபையுடன் விரிவான பேச்சில் ஈடுபட்டு ஒரு தீர்மானத்தை எடுப்பது சிறந்ததாக அமையும் என மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் புத்தசாசனம், மத மற்றும் கலை கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை நேற்று முன்தினம் கண்டி மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்கர்களை மகா விகாரையில் அமைச்சர் சந்தித்தார்.

இதன்போது, பௌத்த துறவறத்துக்கு சிறுவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். துறவறத்துக்கான குறைந்த பட்ச வயதெல்லையை தீர்மானிப்பது தொடர்பில் இதுவரை ஒரு தீர்மானம் எடுக்கப்படாத நிலையில் பௌத்த மகா சங்க சபையுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானம் எடுப்பது சிறந்ததாக அமையும் என மகாநாயக்க தேரர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

இதன்போது நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அமைச்சர் எடுத்துரைத்துள்ளார். பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை அந்த நிலையில் இருந்து மீட்பதற்கு அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என மகாநாயக்க தேரர்கள் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்கள். (ஐ)

# நாட்டை அரசியல்வாதிகளிடமிருந்து பாதுகாக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது

## எல்லே குணவங்ச தேரர்

கொழும்பு, ஜூன் 17

அரசியல்வாதிகள் போன்று தேவையற்ற பிரச்னைகளை எம்மால் தோற்றுவிக்க முடியும். இருப்பினும் நாட்டில் தீர்வு காண வேண்டிய பல பிரச்னைகள் காணப்படுகின்றன. அனைவரும் ஒரே இனமாக இலங்கையர்கள் என்ற வகையில் செயல்படவேண்டும். அதற்கு முன்னர் நாட்டை அரசியல்வாதிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

வழக்கு ஒன்றில் முன்னிலையாக கொழும்பு, உயர் நீதிமன்றத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை வருகை தந்த போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாம் பொறுமையாக இருப்பவர்கள். நாட்டில் பிரச்னைகளை உருவாக்கி மேலும் படுகுழிக்கு இட்டுச் செல்ல வேண்டாம். அனைவரும் ஒரே இனமாக இலங்கையர்கள் என்ற வகையில் செயல்பட வேண்டும். நாம்



எதற்கும் தயார்.

நாடு பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில், பெரும்பாலான மக்கள் துன்பத்திலுள்ள நிலையில் பொறுமையாக பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டியது எமது பொறுப்பாகும்.

அரசியல்வாதிகள் போன்று தேவையற்ற பிரச்னைகளை எம்மால் தோற்றுவிக்க முடியும். நாட்டில் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகள் பல காணப்படுகின்றன. விசேடமாக பொருளாதார பிரச்னைகள் காணப்படுகின்றன.

தேசிய வளங்கள் விற்பனைக்கு எதிராக நான் பல தடவைகள் வழக்கு தொடந்துள்ளேன். நிலவளம், வனவளம், நீர்வளம் மற்றும் யானை வளம் என அனைத்து வளங்களும் நிறைந்ததாக எமது நாடு காணப்படுகிறது.

இருப்பினும் தற்போதுள்ள நாட்டின் அரசியல் வளம் அருவருப்பாக உள்ளது. அரசியல் சொத்துகளுக்கு எந்தவித பாதிப்புகளும் இடம்பெறவில்லை. சொத்து என்பது தூய்மையானது. எனினும் எமது நாட்டை இன்று அரசியல்வாதிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது - என்றார். (ஐ)

# மனைவியை தாக்கிய கான்ஸ்டபிளுக்கு பிணை

கொழும்பு, ஜூன் 17

மனைவியை தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் கான்ஸ்டபிளை இரண்டு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்க நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிளின் திருமணத்துக்கு புறம்பான உறவு தொடர்பில் மனைவி வினவியுள்ளார். இதன்போதே கான்ஸ்டபிள் மனைவியை தாக்கியுள்ளார். இது தொடர்பில் அவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் கான்ஸ்டபிளை கைது செய்தனர்.

கடந்த 12 ஆம் திகதி தாக்குதலுக்கு உள்ளான மனைவி நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# கறுவா செய்கை செயலமர்வு; பலர் ஆர்வத்துடன் பங்கேற்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 17

வடக்கு மாகாணத்தில் கறுவாச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் இடம்பெற்ற செயலமர்வு ஒன்று மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாண கல்லூரியின் விவசாய நிறுவனத்தில் நேற்று நடைபெற்றது.

இலங்கைக்கே உரிய தாவரமான கறுவா இதுவரை மத்திய, தென்பகுதிகளில் மட்டுமே பயிரிடப்பட்டு வந்தது. இப்போதுதான் வடக்கில் கறுவா செய்கை மேற்கொள்வதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். இலங்கை கறுவாவுக்கு சர்வதேச சந்தையில் நல்ல கிராக்கி இருப்பதாகவும் தெரிவித்த கறுவா ஆராய்ச்சி நிலைய பணிப்பாளரான கலாநிதி ஜெயசிங்க கறுவா செய்கை தொடர்பிலான பல்வேறு விளக்கங்களையும் அளித்தார்.

வடக்கில் கறுவா செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் என சில ஆண்டுகளாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே இங்கே கறுவா செய்கையை ஊக்குவிக்க முன்வந்திருப்பதாகவும், குறைந்தளவு நீரை பயன்படுத்தி தரிசு நிலங்களிலும் வளர்க்கக் கூடியதாக இருக்கும் பணப்பயிராக கறுவா விளங்குவதாகவும், இதனை சிறிய அளவில் தோட்டமாகவும் பெருமளவு நிலப்பரப்பில் கூட வளர்க்க முடியும்.

கறுவா பயன்தர இரண்



டரை வருடங்கள் ஆகும். 60 இலிருந்து 100 ஆண்டுகள் வரை பல தலைமுறைகளாக பயன் தரும் எனவும் இங்கே விவசாய கல்லூரி மாணவர்களையும் ஊக்குவிப்பதன் ஊடாக அவர்கள் பொதுமக்கள் மத்தியில் கறுவா செய்கை தொடர்பிலான விழிப்புணர்வை எதிர் காலத்தில் ஏற்படுத்துவார்கள் என இந்நிகழ்வின் ஒழுங்கமைப்பாளர் புவனகுமார் தெரிவித்தார்.

கறுவா கன்றுகளை உற்பத்தி செய்து இரு மடங்கு இலாபம் பெற்றுக் கொள்ள முடியும். கறுவா பட்டையிலிருந்து பெறுமதி சேர் உற்பத்திகள் பலவற்றையும் மேற்கொண்டு அதனை ஏற்றுமதி செய்து நல்ல இலாபம் பெற முடியும் எனவும் செயலமர்வில் தெரிவிக்கப்பட்டது.

கறுவா கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு எவ்வாறு கூட்டெரு தயாரித்து பொலித்தீன் பைகளில் இடப்பட்டு கறுவா விதைகள் இடப்பட வேண்டும் என செயல்முறை ரீதியாக செய்து காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து, கறுவா பட்டையில் இருந்து கறுவாவை எவ்வாறு பிரித்தெடுப்பது, பின்னர் அதனை உலர விடப்படவேண்டிய முறை குறித்தும் நேரடியாக செய்முறை ரீதியாக தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண கல்லூரி விவசாய நிறுவன மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டு தங்களது கறுவா செய்கை தொடர்பிலான பல்வேறு சந்தேகங்களுக்கு விடைகளைப் பெற்றுக் கொண்டனர்.

கடந்த மாதம் வட்டுக்கோட்டையிலும், பின்னர் வட மாகாணத்தின் பல்வேறு பிர தேசங்களிலும் கறுவா தொடர்பிலான செயலமர்வில் பலரும் கலந்து கொண்டு பல்வேறு விளக்கங்களை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கால்நடை துறை மேம்பாட்டுக்கு 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 17

நாட்டின் கால்நடை துறையின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட மிகப் பெரிய தொகை அடுத்த மூன்று வருடங்களில் கிடைக்கவுள்ளன என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உலக வங்கி 2023-2027 ஆண்டுகளில் விவசாயத் துறைக்கு 380 கோடி ரூபாயை வழங்கவுள்ளது. இதில், 150 கோடி ரூபாய் கால்நடை துறை மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தவிர, விவசாய வலயங்களில் வீதி வலையமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்கும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இது வரையில் புனரமைக்கப்படாத கிராமப்புற விவசாய வீதிகளை புனரமைப்பதற்காக இந்த நிதி ஒதுக்கீட்டை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை விவசாயத் திட்டங்களுக்கு பயனுள்ள



வகையில் பயன்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை விவசாய அமைச்சில் இடம்பெற்றது. கால்நடை வளர்ப்புத் துறையின் அபிவிருத்திக்காக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி 2014 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒதுக்கப்பட்ட அதிக தொகை எனவும் கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக கால்நடைத் துறைக்கு அதிக நிதி இல்லாததால், நாட்டின் பால் மற்றும் முட்டை உற்பத்தி மற்றும் ஒட்டுமொத்த கோழித் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
17.06.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தலைமையற்ற தலைநகரம்?

திருகோணமலை ஒருகாலத்தில் ஈழத் தமிழர்களின் தலைநகரமாக பிரகடனம் செய்யப்பட்ட இடமாகும். இந்தப் பின்புலத்தில்தான் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கத்தின் தலைமைப் பணிமனை திருகோணமலையில் இயங்கியது. மிதவாத தலைமைகளும் - அனைத்து இயக்கங்களும் திருகோணமலைதான் தமிழ் மக்களின் தலைநகரென்று பிரகடனம் செய்தன. ஆனால், திருகோணமலையின் இன்றைய நிலை?

திருகோணமலையை தமிழ் மக்களின் தலைநகராகக் கருதியதற்கு பின்னால் ஒரு முக்கியமான காரணமிருந்தது. அதாவது, திருகோணமலையின் மூலோபாய முக்கியத்துவம். திருகோணமலை உலகின் சிறப்பான இயற்கை துறைமுகங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது திருகோணமலை பிரித்தானியர்களின் முக்கிய கடற்படை தளங்களில் ஒன்றாக இருந்தது. இந்தப் பின்புலத்தில் திருகோணமலை இந்து சமுத்திர பிராந்தியத்தின் தவிர்க்க முடியாத மூலோபாய சொத்தாகக் கருதப்பட்டது. இந்தப் பின்புலத்தில்தான் திருகோணமலையை தமிழ் மக்களின் தலைநகராக அனைத்து இயக்கங்களும் பிரகடனம் செய்தன. இதன் மூலம் தமிழர்கள் அதிகாரத்தை கைப்பற்றினால் திருகோணமலையின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி பேரம்பேச முடியுமென்று தமிழ் அரசியல் சமூகம் கருதியது.

உலகம் அமெரிக்க - சோவியத் பனிப் போருக்குள் சிக்குப்பட்டிருந்த காலத்தில் திருகோணமலை துறைமுகம் தொடர்பில் இந்தியாவின் கரிசனை அதிகரித்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஜே. ஆர். ஜெயவர்த்தன முற்றிலும் மேற்கு சார்பான கொள்கை நிலைப்பாட்டைக் கையிலெடுத்தார். 1977இல் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஜெயவர்த்தன அமெரிக்காவுடன் நெருங்கிச் செயல்படுவதற்கான திட்டங்களை வகுத்தார். அன்றைய சூழலில், இந்தியா சோவியத் முகாமுடன் இணைந்திருந்தது. இந்தப் பின்புலத்தில் இந்திரா காந்தி தலைமையிலான இந்தியா கடும் அதிருப்தியுற்றது. இந்தியாவின் அதிருப்திக்கான காரணிகளில் திருகோணமலை துறைமுகமும் ஒன்று. அன்றைய சூழலில், ஜெயவர்த்தன திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்கக் கடற்படையினரின் பயன்பாட்டுக்கு வழங்கப் போவதான அச்சம் ஒன்று இந்திய மட்டத்தில் உணரப்பட்டது. இத்துடன், வேறு காரணிகளும் இருந்தன.

திருகோணமலை துறைமுகம் தொடர்பில் இந்திய மட்டத்தில் நிலவிய அச்சத்தின் காரணமாகவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி திருகோணமலை துறைமுகத்தை இராணுவ பயன்பாடுகளுக்காக எந்தவொரு வெளிநாட்டு தரப்புக்கும் அனுமதிக்கக்கூடாதென்னும் உடன்பாடு உண்டு. இதேவேளை, திருகோணமலையின் மீது இந்தியா பிரத்தியேக ஈடுபாட்டையும் கொண்டிருக்கின்றது. திருகோணமலையில் எதிர்காலத்தில் மிகப்பெரிய திட்டங்களையும் இந்தியா முன்னெடுக்கலாம். அதேவேளை, இந்தியாவுக்கும் திருகோணமலைக்கும் இடையில் எண்ணெய் குழாய் நிர்மாணிக்கும் திட்டம் ஒன்றும் ஆராயப்படுகின்றது.

இவை அனைத்தும் திருகோணமலையின் முக்கியத்துவத்துக்கு எடுத்துக்காட்டு. ஆனால், மறுபுறம் இந்தளவு முக்கியமான திருகோணமலையில் தமிழர் அரசியல் எவ்வாறு உள்ளது? திருகோணமலையின் தமிழ் அரசியல் குரல் மிகவும் பலவீனமாக இருக்கின்றது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் தனது சார்பில் கூட்டங்களில் பங்குகொள்வதற்காக பிறிதொரு பிரதிநிதியை நியமித்திருக்கின்றார். இன்றைய சூழலில், திருகோணமலை தமிழ் மக்களின் தலைநகரம் என்னும் கதையெல்லாம் முடிந்துவிட்டது. - ஆகக் குறைந்தது, தமிழ் மக்கள் வாழும் ஒரு மாவட்டம் என்னும் வகையில்தான் விடயங்களை நோக்க வேண்டும். அந்தப் பின்புலத்தில்கூட, திருகோணமலை தமிழ் மக்கள் தலைமையற்ற அரசியல் குரலற்ற மக்களாகவே இருக்கின்றனர்.

# 7,342 பயிலுநர்களுக்கு நேற்று ஆசிரியர் நியமனங்கள்!

*கொழும்பு, ஜூன் 17*

*நாடளாவிய ரீதியிலுள்ள 19 தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கடந்த 2018 - 2020 வரையான காலப்பகுதியில் பயிற்சியை நிறைவு செய்த 7 ஆயிரத்து 342 ஆசிரியர் பயிலுநர்களுக்கு நேற்று வெள்ளிக்கிழமை நியமனங்கள் வழங்கப்பட்டன.*

*இதன் பிரதான நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பிலுள்ள அலரி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், பிரதமர் தினேஷ் குணவர்த்தன, உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் , கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார், கல்வி அமைச்சின் செயலாளர் எம். என். ரணசிங்க மற்றும் மேல் மாகாண ஆளுநர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.*

*இந்த பிரதான நிகழ்வின் போது 2ஆயிரத்து 355 டிப்ளோமாதாரிகளுக்கு தேசிய பாடசாலைகளுக்கும் , மேல் மாகாண பாடசாலைகளுக்கும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.*

*ஏனையோருக்கு மாகாண கல்வி அமைச்சினால் அந்தந்த மாகாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளில் நியமனங்கள் வழங்கப்பட்டன.*

*ஆசிரியர் பற்றாக்குறையான இடங்களை ஆராய்ந்து அந்த இடங்களுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இம்முறை வழங்கப்பட்டுள்ள நியமனங்கள் தொடர்பான மேன்முறையீடுகள் எவையும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.* (ஐ)

## பெருக்கடி விநாயகர் பெருந்திருவிழா

*யாழ்ப்பாணம், ஜூன் 17*

*நெடுந்தீவு - நடுக்குறிச்சி - பெருக்கடி ஸ்ரீ விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.*

*தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் 9ஆம் நாளான எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.*

## வவுனியா விபத்தில் பெண் ஒருவர் பலி!

*வவுனியா, ஜூன் 17*

*வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.*

*மறவன்குளம் பகுதியில் உள்ள தனது வீடு நோக்கி உயிரிழந்த பெண் ஓட்டோவில் பயணித்துள்ளார். வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ அருகில் இருந்த பாலத்தில் விழுந்து விபத்துக்கு உள்ளானது.*

*விபத்தில் பலத்த காயமடைந்த பெண் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார்.*

*சம்பவத்தில் மறவன்குளம் பகுதியை சேர்ந்த 61 வயதான பெண்ணே உயிரிழந்தார்.*

*விபத்து தொடர்பான விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.* (ஐ)

# அரச மருந்தாளர் சங்கத்தினர் அடையாள வேலை நிறுத்தம்!

*கொழும்பு, ஜூன் 17*

*அரச மருந்தாளர் சங்கம் நாடளாவிய ரீதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தது.*

*மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையின் 23 மருந்தாளர்களை இடமாற்றம் செய்தமைக்கு எதிராகவே இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதாக சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்துள்ளார்.*

*இதன் காரணமாக பல மருத்துவமனைகளில் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் தடைகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.* (ஐ)

# அநுராதபுரம் - ஓமந்தை ரயில் சேவை மீண்டும்!

*கொழும்பு, ஜூன் 17*

*அநுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் போக்குவரத்து அடுத்த மாதம் மீளஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையான ரயில் சேவைகள் வழமையான நேர அட்டவணையின்படி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

*அநுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் மார்க்கம் திருத்தப் பணிகளுக்காக கடந்த ஜனவரி மாதம் மூடப்பட்டது.*

*62 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த ரயில் மார்க்கம் இந்திய கடன் உதவியின் கீழ் 33 பில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.*

*புனரமைக்கப்பட்ட ரயில் மார்க்கத்தில் மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் ரயில்கள் பயணிக்க முடியுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.* (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜூன் - 17 சனிக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆனி 02**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.30 - 09.00 |
| ராகு காலம் | : | 09.00 - 10.30 |
| திதி | : | அமாவாசை |




**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
எளிதாக முடிக்க வேண்டிய விஷயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். எச்சரிக்கை தேவைப்படும் நாள்.

**கடகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி வாழ்வில் உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும் குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் முக்கிய வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**விருட்சிகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாக பேசத் தொடங்குவார்கள். சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**தனுசு**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சமாளிப்பீர்கள். திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

# செந்தில் பாலாஜியை பதவி நீக்குமாறு வலியுறுத்தி அ. தி. மு. க. ஆர்ப்பாட்டம்!

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

*சென்னை, ஜூன் 17*

செந்தில் பாலாஜியை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி அ. தி. மு. க. சார்பில் ஜூன் 21ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தி. மு. க. என்றாலே அதிகார துஷ்பிரயோகம், ஊழல், கட்டப் பஞ்சாயத்து, வன்முறை, நில அபகரிப்பு, வியாபாரிகள் மற்றும் தொழில் செய்பவர்கள் உள்ளிட்டோரை மிரட்டுவது மற்றும் கொடுமைப்படுத்துவது முதலான பல்வேறு வன்முறைச் சம்பவங்கள்தான் மக்கள் அனைவருக்கும் நினைவில் வருகிறது.

2021 சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது, நிறைவேற்ற முடியாத பல்வேறு வாக்குறுதிகளை அளித்து, மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த தி. மு. க., கடந்த இரண்டு ஆண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் பல்வேறு வகைகளில் விஞ்ஞான ரீதியாக ஊழல்களை புரிந்து மக்கள் விரோத அரசாக இருந்து வருகிறது.



தி. மு. க. அரசின் முதல்வர் மு.க. ஸ்டாலின், தமிழகத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள், சட்டம்-ஒழுங்கு சீர்கேடுகள் முதலானவற்றை சிறிதும் கண்டுகொள்ளாமல், தன் குடும்ப நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருவது மிகுந்த வேதனைக்குரிய விசயமாகும்.

மு. க. ஸ்டாலின் குடும்பம் வளம்பெற வேண்டும் என்பதற்காக தி. மு. க. அரசின் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் பதவியில் இருந்த செந்தில் பாலாஜி பல்வேறு வகைகளில் ஊழல் முறைகேடுகள் செய்துள்ளமையை மக்கள் அனைவரும் கண்கூடாகப் பார்க்கின்றனர்.

பல்வேறு அதிகார துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டுள்ள செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் என்று, நேற்று (நேற்று முன்தினம்) ஆளுநருக்கு கழகத்தின் சார்பில் கடிதம் கொடுக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ள தி. மு. க. அமைச்சர் செந்தில் பாலாஜியை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்வரும் 21ஆம் திகதி - புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில், வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். இவற்றில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றுள்ளது.

(ஐ)

# சனாதன ராஷ்டிரக் கனவில் பா. ஜ. க. செயல்படுகின்றது

## திருமாவளவன் குற்றச்சாட்டு



*சென்னை, ஜூன் 17*

'சனாதன ராஷ்டிரக்' கனவின் அடிப்படையிலேயே பொது சிவில் சட்ட அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற ஐயம் பலருக்கும் எழுந்துள்ளதாக விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பொது சிவில் சட்டம் என்ற பெயரில் மக்களைப் பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் அடைய முற்படும் பா. ஜ. க. அரசின் மக்கள் விரோத போக்கை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்திய சட்ட ஆணையம் பொது சிவில் சட்டம் குறித்து பொதுமக்களின் கருத்தை 30 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என அறிவிப்புச் செய்துள்ளது. தேர்தலை மனதில் வைத்து பா. ஜ. க. அரசின் தூண்டுதலால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு சட்ட அமைச்சகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்திய சட்ட ஆணையம் பொது சிவில் சட்டம் குறித்த 185 பக்க அறிக்கையை 2018 ஆம் ஆண்டு வெளியிட்டது. அதில் "இந்திய கலாசாரத்தின் பன்முகத்தன்மை கொண்டாடப்பட வேண்டும். அதனால், குறிப்பிட்ட குழுக்கள் அல்லது சமூகத்தின் பலவீனமான பிரிவினர் தனி உரிமைகளை இழந்துவிடக் கூடாது. இந்த முரண்பாட்டைத் தீர்ப்பது என்பது பன்மைத்துவத்தை ஒழிப்பது என்று அர்த்தமல்ல" - என்று கூறியுள்ளது.

சீக்கிய மதத்தினரும், பௌத்த மதத்தினரும் தங்களுக்குத் தனியே குடும்ப சட்டங்கள் வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். தங்களை இந்து குடும்ப சட்டத்துக்குள் உள்ளடக்கியிருப்பதை எதிர்த்து வருகின்றனர். இந்நிலையில் முஸ்லிம்கள், கிறித்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மை சமயத்தினருக்கு இருக்கும் குடும்ப சட்டங்களையும் ஒழித்துக்கட்ட மோடி அரசு முற்படுகிறது. ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம் என்னும் இந்து ராஷ்டிரம் எனப்படும் 'சனாதன ராஷ்டிரக்' கனவின் அடிப்படையிலேயே இந்த அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்கிற ஐயம் பலருக்கும் எழுந்துள்ளது.

அனைத்துத் தளங்களிலும் படுதோல்வி அடைந்து விட்ட பா. ஜ. க. அரசு, மக்களின் கவனத்தைத் தனது தோல்வியிலிருந்து திசை திருப்புவதற்காகவே இத்தகைய பிரச்னைகளை எழுப்புகிறது. விலைவாசி ஏற்றம், வேலையில்லாத பிரச்னை, பொருளாதார வீழ்ச்சி என சுதந்திர இந்தியாவில் அமைந்த ஆட்சிகளிலேயே மிகவும் மோசமான ஆட்சி இந்த பா. ஜ. க. ஆட்சிதான் என்ற விமர்சனத்தை மோடி அரசு சந்தித்து கொண்டிருக்கிறது. நாட்டை வளர்ச்சிப் பாதையில் செலுத்துவதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத மோடி அரசு தனக்குத் தெரிந்த ஒரே பிற்போக்கு - பெரும்பான்மை மதவாத அரசியலைக் கையில் எடுத்து மக்களைப் பிளவுபடுத்துவதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடப் பார்க்கிறது - என்றார்.

(ஐ)

# உணவுப் பாதுகாப்பு நிலைமை இலங்கையில் மேம்படுகின்றது

**ஐ. நா. அமைப்பு அறிக்கை**

கொழும்பு, ஜூன் 17

**2023 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும், உணவுப் பாதுகாப்பு மேம்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரியவந்துள்ளது.**

3.9 மில்லியன் மக்கள் அல்லது மக்கள்தொகையில் 17 சதவீதம் பேர் மிதமான கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுடன் ஒப்பிடும்போது சுமார் 40 சதவீதம் குறைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 10,000 பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர். கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 66,000 ஆக இருந்தது.

உணவுப் பாதுகாப்பின் முன்னேற்றம், சிறந்த உணவு நுகர்வில் இருந்து உருவாகிறது.

இது உணவுப் பொருட்களின் விலை குறைப்பு மற்றும் அறுவடை காலத்தில் விவசாய சமூகங்களிடையே மேம்பட்ட வருமானம் ஆகியவை காரணமாக இருக்கலாம்.

இந்த நேர்மறையான போக்கு இருந்தபோதிலும், சில மாவட்டங்களில் குறிப்பாக கிளிநொச்சி, நுவரெலியா, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்றவற்றில் உணவுப் பாதுகாப்பின்மை அதிகமாகவே உள்ளது.

தோட்டத் துறையில் உள்ள சமூகங்களுக்குள்ளும், சமுர்த்தி போன்ற சமூக உதவித் திட்டங்களை நம்பியிருக்கும் தினசரி கூலித் தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்கள் மத்தியிலும் மிக உயர்ந்த அளவிலான உணவுப் பாதுகாப்பின்மை காணப்படுகின்றது.

இந்நிலையில், 2022/2023 இல் இரண்டு முக்கிய பயிர் பருவங்களில் அரிசி மற்றும் மக்காச்சோளம் உள்ளிட்ட தானியங்களின் உற்பத்தி கடந்த ஐந்தாண்டு சராசரியை விட 14 வீதம் குறைவாக 4.1 மில்லியன் தொன்களாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சிறு விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் விநியோகிக்கப்படும் அத்தியாவசிய உரங்கள், பலதரப்பு மற்றும் இருதரப்பு நன்கொடை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிதி மூலம், உற்பத்தியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## முதல் வைத்தியர், பொறியியலாளர்களுக்கு கிளி. மகா வித்தியாலயத்தில் கௌரவிப்பு



கிளிநொச்சி, ஜூன் 17

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கணித விஞ்ஞான பிரிவு உருவாக்கப்பட்ட முதல் ஆண்டில் தெரிவாகிய வைத்தியர் மற்றும் பொறியியலாளர்களாக வெளியேறியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலை ஒன்றுகூடலில் இடம் பெற்றது.

2013ஆம் ஆண்டு கணித விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 2015ஆம் ஆண்டு பரீட்சையில் தோற்றி திறமைச் சித்தி மூலம் 60 மாணவர்கள் அப்பாடசாலையிலிருந்து சென்றுள்ளார்கள். அந்த ஆண்டில் முதன்மைப் பெறுபேறுகளை பெற்ற கர்சிகா யசோதரன் என்ற மாணவி மகா வித்தியாலயத்திலிருந்து தெரிவான முதலாவது மருத்துவராவார்.

மேலும், இராசேந்திரன் மதுசனன், முத்தையா ருசாந்தன் ஆகிய இருவரும் அப்பாடசாலையிலிருந்து தெரிவான முதலாவது பொறியியலாளர்களாவர். இவர்கள் பட்டப்படிப்பை முடித்து பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை மாணவர் ஒன்றுகூடலில் பாடசாலை முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அவர்களுக்கான நினைவுச் சின்னங்கள் பாடசாலை முதல்வரினால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வைத்தியரான கர்சிகா யசோதரன் மாணவர்களை ஊக்குவிக்கும் கருத்துக்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 2 திணைக்களங்களுக்குப் பூட்டு

கொழும்பு, ஜூன் 17

இரண்டு அரச திணைக்களங்களை மூடுவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, நுகர்வோர் விவகார அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் இரத்துச் செய்யப்பட்ட உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் கலைக்கப்பட்டுள்ளது.

மேலும், கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டு 1990 பெப்ரவரி 6ஆம் திகதி வர்த்தமானி அறிவிப்பின் மூலம் அறிவிக்கப்பட்ட தொலைத்தொடர்புத்துறை திணைக்களமும் கலைக்கப்பட்டுள்ளது. (அ)

## அழகியல், தொழில்நுட்ப பாட பரீட்சை திகதிகள் வெளியீடு

கொழும்பு, ஜூன் 17

சாதாரணத் தரப் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரர்களுக்கு அழகியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் தொடர்பான நடைமுறைப் பரீட்சைகளுக்கான திகதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், இம்மாதம் 27ஆம் திகதி தொடக்கம் ஜூலை 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, உள்ளூர் நடனம், இந்திய நடனம் மற்றும் ஓரியண்டல் இசைக்கான நடைமுறைத் தேர்வுகள் ஜூன் 27 முதல் ஜூலை 6 வரையிலும், பொறியியல் தொழில்நுட்ப நடைமுறைத் தேர்வுகள் ஜூலை 12 முதல் ஜூலை 21 வரையிலும், உயிரியல் தொழில்நுட்பத்திற்கான நடைமுறைத் தேர்வுகள் ஜூலை 29 முதல் ஜூலை 31 வரை நடைபெறும் என்றும் தேர்வுத்துறை மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# சர்வதேச கடல் போக்குவரத்துப் பாதை நகர்த்தப்படுவதை எதிர்க்கும் இலங்கை

கொழும்பு, ஜூன் 17

சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதையை தேவேந்திரமுனையில் இருந்து 15 கடல் மைல் தொலைவுக்கு நகர்த்துமாறு சர்வதேச கடல்சார் அமைப்பு முன்வைத்த யோசனைக்கு இணங்க போவதில்லை என இலங்கை அரசு அந்த அமைப்புக்கு அறிவித்துள்ளது.

நீலத் திமிங்கிலங்களை பாதுகாத்தல் மற்றும் சிறிய கப்பல்களில் மோதி ஏற்படும் விபத்து சம்பந்தமாக நடத்தப்பட்ட மீளாய்வின் பின்னர், சர்வதேச கடல்சார் அமைப்பு இந்த யோசனையை முன்வைத்துள்ளது.

இந்த நிலையில் அடுத்த மாதம் நடைபெற உள்ள சர்வதேச கடல்சார் அமைப்பின் 80 ஆவது மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் இருந்து இந்த யோசனையை நீக்குமாறு இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச கடல்சார் அமைப்பின் 80ஆவது மாநாடு எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை பிரித்தானியாவில் நடைபெறவுள்ளது.

சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதையை நகர்த்துவது தொடர்பான யோசனை குறித்து கலந்துரையாடப்படும் இந்த மாநாட்டில் இலங்கையின் சிறப்புக்குழு கலந்துகொள்ள உள்ளது.

சர்வதேச கடல்சார் அமைப்பு கொண்டு வந்துள்ள இந்த யோசனைக்கு திமிங்கிலங்கள் தொடர்பான சர்வதேச ஆணைக்குழு, கப்பல் போக்குவரத்து தொடர்பான சர்வதேச சபை, கப்பல் உரிமையாளர்கள் அங்கம் வகிக்கும் பிம்கோ அமைப்பு, சுதந்திர எரிபொருள் போக்குவரத்து கப்பல் உரிமையாளர்களின் சர்வதேச அமைப்பு உட்பட 8 அமைப்புகள் இணை அனுசரணை வழங்குகின்றன.

இந்த நிலையில், இந்த யோசனை குறித்து தீவிரமாக கவனத்தில் கொண்டுள்ளதாகவும் இதற்கு இணங்க முடியாது எனவும் இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இது சம்பந்தமான கடந்த 9 ஆம் திகதி அனைத்து தரப்பினரும் கலந்துகொண்ட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

மிகப் பெரிய கப்பல் போக்குவரத்து பாதையான கிழக்கு மற்றும் மேற்கு கடல் வழி போக்குவரத்து பாதை தேவேந்திரமுனையில் இருந்து 12 கடல் மைல் தொலைவில் அமைந்துள்ளது.

இந்த வழியின் ஊடாக இலங்கைக்கு அருகில் வருடாந்தம் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வர்த்தக கப்பல்கள் பயணிக்கின்றன.

இந்த நிலையில், சர்வதேச கடல்சார் அமைப்பு கப்பல் போக்குவரத்து பாதையை தேவேந்திரமுனையில் இருந்து 15 கடல் மைல் தொலைவுக்கு நகர்த்தவேண்டும் என யோசனை முன்வைத்துள்ளது.

கப்பல் போக்குவரத்து பாதையை இவ்வாறு நகர்த்தப்பட்டால், கொழும்பு துறைமுகத்தில் இருந்து 76 கடல் மைல்களும், காலி துறைமுகத்தில் இருந்து 21.6 கடல் மைல்களும், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து 26.9 கடல் மைல்களும் சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதை நகரும்.

இதனிடையே உலகில் முன்னணி கப்பல் நிறுவனமான எம்.எஸ்.சீ என்ற மெட்டர்ரேனியன் ஷிப்பிங் நிறுவனம் ஏற்கனவே இந்த பிரதான கடல் போக்குவரத்து பாதையில் தனது கப்பல்களை 15 கடல் மைல் தொலைவில் போக்குவரத்தில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கு தெற்கில் மாற்றுப் பாதையில் தமது கப்பல் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்த நிறுவனம் ஏனைய நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# ரூ.5 இலட்சம் பெறுமதியான திருட்டுப் பொருட்கள் மீட்பு!

## சாவகச்சேரிப் பொலிஸார் அதிரடி

**யாழ்ப்பாணம், ஜூன் 17**

**தென்மராட்சி சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலமாக முறைப்பாடு கிடைத்து சில மணி நேரத்தில் 5இலட்சம் ரூபாய் பெறுமதியான திருட்டுப் பொருட்கள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.**

நுணாவில் மேற்கு, சாவகச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள வெளிநாட்டில் வசிப்பவரின் வீடொன்றில் இருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள் வீடு உடைத்து திருடப்பட்டிருப்பதாக கடந்த வியாழக்கிழமை வீட்டு பராமரிப்பாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் விரைந்து செயற்பட்ட சாவகச்சேரிப் பொலிஸார் சில மணி நேரங்களில் தொலைபேசி உரையாடல்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு நாவற்குழிப் பகுதியில் மறைத்து

வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த திருட்டுப் பொருட்களை மீட்டதுடன்-திருட்டுச் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

இதன்போது, திருடப்பட்ட



பொருட்களான இரண்டு குளிர்சாதன பெட்டிகள், குளிரூட்டி, அவண், தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரம், மின் விசிறி மற்றும் மெத்தைகள் ஆகிய 5 இலட்சம் ரூபாய் பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்,மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் அறிவுரையின் கீழ்,சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் உத்தியோகத்தர் பாலித செனவிரட்னவின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர்களான டார்வின் மற்றும் ஜெயரூபன் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (அ)



# சிறுதானிய உணவு ஊக்குவிப்பு கண்காட்சி யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஜூன் 17

சிறுதானிய உணவை ஊக்குவிக்கும் கண்காட்சியொன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி அமைந்துள்ள விவசாய திணைக்களத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

சிறுதானிய உணவை ஊக்குவிக்கும் நாள் என்ற தொனிப்பொருளில் இந்தக் கண்காட்சி வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

சிறுதானிய உணவுகளான கம்பு, திணை, வரகு, சாமை என பல வகையான சிறுதானியங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் இங்கு காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

மேலும், சிறுதானியங்களில் இருந்து எவ்வாறு உணவு தயாரிப்பது என்பதும் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

சிறு தானிய உணவை வழங்கி தானியங்களை விற்பனை செய்து அவற்றின் ஊடாக ஏற்படும் போஷாக்கு நிலைமைகள் தொடர்பாகவும் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் பயனாளிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஏழு பெண்கள் உட்பட 8 பேர் கல்கிசைப் பகுதியில் கைது

கொழும்பு, ஜூன் 17

கல்கிசையில் பகுதில் ஸ்பா என்ற போர்வையில் விபச்சார விடுதி ஒன்றை நடத்தி வந்த குற்றச்சாட்டின் பேரில் ஏழு பெண்கள் உட்பட 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் பேரிலேயே இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளதாகவும், அவர்கள் கல்கிசை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 19 தொடக்கம் 29 வயதுடையவர்கள் எனவும், களுத்துறை, இடல்கசின்ன, பன்னிபிட்டிய, வாதுவ, வத்தளை மற்றும் ஹல்மில்லாவ ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் உதவி

கொழும்பு, ஜூன் 17

நாட்டில் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான உதவிகளை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

நேபாளத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நளீன் ஆரியரத்ன தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை உலக சுகாதார ஸ்தாபனம் வழங்குமென அவர் கூறினார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 44 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

67 சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளில் டெங்கு நோய் பரவுதற்கான அபாயம் தொடர்ந்தும் நிலவுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நளீன் ஆரியரத்ன குறிப்பிட்டார். (அ)

# அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி மணல் ஏற்றிய 2 டிராக்டர்கள் சிக்கின!

முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பறங்கியாற்றுப் பகுதியில் அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மணல் ஏற்றிய இரண்டு உழவு இயந்திரங்கள் நட்டாங்கண்டல் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

பறங்கியாற்றில் உட்பகுதியில் உழவு இயந்திரங்களை இறக்கி மணல் ஏற்றிய குற்றச்சாட்டிலேயே இவை கைப்பற்றப்பட்டு நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, உழவு இயந்திரச் சாரதிகள் இருவரை பொலிஸ் பிணையில் செல்ல பொலிஸார் அனுமதித்துள்ளதாகவும், குறித்த உழவு இயந்திர சாரதிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மாங்குளம் நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 21ஆம் திகதி பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

# பொலிஸ் காவலில் மரணங்கள் சட்டத்தரணிகள் சங்கம் விசனம்

கொழும்பு, ஜூன் 17

பொலிஸ் காவலின்போது நிகழும் உயிரிழப்புக்கள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் விசனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கின்ற, தமது பணியை உரியவாறு நிறைவேற்றுவதற்குத் தவறுகின்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக வலுவான சட்டங்களை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

மக்கள் பாதுகாப்பை முன்னிறுத்தி குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸ் காவலின் கீழான உயிரிழப்புச்சம்பவங்கள் மீள நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்களைத் தயாரிக்குமாறும் அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் சட்ட முறைமையானது விசாரணை, வழக்குத்தொடுப்பு, தண்டனை வழங்கல் ஆகியவற்றை முன்னெடுப்பதற்கு உரியவாறான அதிகாரங்களை வழங்கியிருக்கின்றது.

ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் அடிப்படை அதுவே என்பதுடன் அந்தச் செயன்முறை மீதான நம்பகத்தன்மையும் வெளிப்படைத்தன்மையும் பாதுகாக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும் என்றும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிக்குக்கூட உயிர்வாழ்வதற்கான உரிமை உண்டு எனத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் சங்கம், பொலிஸ் காவலின் கீழான சந்தேகநபரின் உயிரிழப்பு அல்லது சட்டவிரோத படுகொலை என்பன உயிர்வாழ்வதற்கான உரிமையை மீறுகின்றது என்றும் தெரிவித்துள்ளது.

பொலிஸ் காவலின்கீழ் இடம்பெறும் உயிரிழப்புக்கள் மற்றும் சித்திரவதைகள் என்பன கரிசனைக்குரிய மட்டத்தில் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் சங்கம், மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மாத்திரம் அரசின் கடமையல்ல என்றும் மாறாக பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான இழப்பீட்டை வழங்குவதும், சட்டத்தை மீறுபவர்களைத் தண்டிப்பதும் அரசின் கடமையாகும் என்றும் வலியுறுத்தியுள்ளது. (அ)

# வவுனியா மாவட்டத்தின் எல்லை மீள் நிர்ணயம் குறித்து ஆராய்வு

வவுனியா, ஜூன் 17

வவுனியா மாவட்ட எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகையை அடிப்படையாக கொண்டு சில கிராம அலுவலர் பிரிவுகளை பிரிப்பதற்கும், சில பிரிவுகளை இணைப்பதற்கும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்கள் நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளும் பொருட்டு வவுனியா பிரதேச செயலர் பிரிவில் பட்டாணிச்சூர், வேப்பங்குளம், பண்டாரிக்குளம், கூமாங்குளம், உக்குளாங்குளம், மகாறம்பைக்குளம் என்பனவற்றையும் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் மெனிக்பாம், ஆண்டியாபுளியங்குளம் என்பனவற்றையும் தனி கிராம அலுவர் பிரிவுகளாக பிரிப்பதற்கும், கலாபோகஸ்வேவ உள்ளிட்ட 4 சிங்கள குடியேற்ற கிராமங்களின் நிர்வாக நடவடிக்கையை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம்

அடைக்கலநாதன், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களில் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அரச நிறுவனங்கள் தனியார் மயமானால் பொருளாதாரத்தில் பின்னடைவு ஏற்படும்

## எச்சரிக்கின்றார் சித்தார்த்தன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜுன் 17

**அரச நிறுவனத்தை தனியார் நிறுவனமாக மாற்றுவதன் ஊடாக இலங்கையின் பொருளாதார நிலைமைகளைப் பின்னடையச் செய்வதற்கான நிலை உருவாகும் என பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்- அரச நிறுவனத்தை தனியார் நிறுவனமாக மாற்றுவதன் மூலம் இலங்கையின் பொருளாதார நிலைமைகளைப் பின்னடையச் செய்யக்கூடிய நிலை உருவாகலாம். அரசாங்கத்தின் சொத்துக்கள் விற்கப்படுதலானது தனிப்பட்ட ஒருவரைக் குறிவைத்து மேற்கொள்ளும் செயற்பாடாகவே காணப்படுகின்றது.

அதனால், நாட்டுக்கு எந்தவித நன்மையும் கிடைக்காது என்பதுடன் மாறாக தனிநபர்களுக்கே நன்மையளிக்கும். ஆகவே இவ்வாறான செயற்பாடுகளை முழுமையாக எதிர்க்க வேண்டும்.

அரசியலுக்கு அப்பால் நாட்டை பொருளாதார ரீதியாக வளர்க்க வேண்டிய சூழலில் பின்னடையச் செய்யும் செயற்பாடு எங்கு நடந்தாலும் நாம் அதனை முழுமையாக எதிர்க்கவேண்டும்.

தற்பொழுது பல விடயங்களில் ஆளுங்கட்சிக்குள் பல்வேறு கருத்துக்கள் காணப்படுவதுடன், பொதுஜன பெரமுனாவுக்குள்ளே தனியாக ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கான எண்ணப்பாடொன்று தோன்றியுள்ளது.

இதைவிட வளர்ந்து வரும் தலைமைத்துவத்தை நோக்கிச் செல்லும் நாமல், அரச சொத்துக்களை அழிக்கக்கூடாது என்று எண்ணக்கூடும். எது எவ்வாறாயினும் பொதுவுடமைகளைத் தனியுடமையாக்குவது பிழையான விடயமாகும்.

ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் சட்ட மூலமானது, தொலைக்காட்சி ஊடக நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதையே பிரதானமாகக் கொண்டுள்ளது.

கட்டுப்பாடு என்று கூறும் போதே ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியாகவே நாம் கருதுகின்றோம்.

அது இன்னும் வரவில்லை என்றாலும் வருகின்றபொழுது அதனை கடுமையாக எதிர்த்து தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இதேபோன்று, சந்திரிகா காலத்திலும் இவ்வாறானதொரு முயற்சி மேற்கொள்ளப்பட்ட நிலையில் அது இல்லாது செய்யப்பட்டது-என்றார். (அ)




# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழா நேற்று

யாழ்ப்பாணம், ஜுன் 17

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழா நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸூம் கலந்துகொண்டனர்.

இதேவேளை, கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே.கா. கணபதிப்பிள்ளை, வீ. கருணலிங்கம், யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், யாழ். மாநகர முன்னாள் மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# கதிர்காமத்தில் டிராக்டர் விபத்து; 7 இராணுவ சிப்பாய்கள் காயம்!

கொழும்பு, ஜுன் 17

கதிர்காமம் கிரிவெஹர ரஜமஹா விஹாரைக்கு அருகில் இராணுவத்துக்குச் சொந்தமான உழவு இயந்திரம் நேற்று வெள்ளிக்கிழமை காலை விபத்துக்குள்ளானதில் ஏழு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்து கதிர்காமம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் நால்வர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் இராணுவ சிங்க படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் கதிர்காமம் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தீவிரமடையும் டெங்கு!

கொழும்பு, ஜுன் 17

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் என உறுதிப்படுத்தப்படும்வரை அனைத்து காய்ச்சல் நோயாளிகளும் நுளம்புகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென டெங்கு கட்டுப்பாட்டு நிபுணர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஊடாக மற்றுமொருவருக்கு நுளம்பின் மூலம் தொற்று ஏற்படக்கூடும் என்பதால் அனைத்து காய்ச்சல் நோயாளிகளும் நுளம்புகளிலிருந்து பாதுகாக்கப்படவேண்டுமென குழுவின் தலைவரான சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல சுட்டிக்காட்டினார்.

தற்போதைய டெங்கு நிலைமையை கட்டுப்படுத்தும் வகையில் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் வைத்தியசாலைகளில் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்ட இடங்களில் தனிமைப்படுத்தப்பட வேண்டுமென சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் கைவிடப்பட்ட காணிகளை டெங்கு நுளம்புகள் அதிகம் பெருகும் இடங்கள் என கருதி வாரத்தில் ஐந்து நாட்களை ஒதுக்கி ஆய்வு செய்யுமாறும் இராஜாங்க அமைச்சர் சீதா சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் கை, கால்களை மறைக்கும் வகையில் பொருத்தமான ஆடைகளை அணிவதற்கு சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், பெற்றோருக்கு எவ்வித மேலதிகச் செலவும் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டுமென கலந்துரையாடப்பட்டது. (அ)

# ரணிலின் வெளிநாட்டு பயணத்தின் பின் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படலாம்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஜுன் 17

அரசியலமைப்புக்கு அமைய அமைச்சரவை குறித்து அவதானம் செலுத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு பயணத்தை நிறைவு செய்ததன் பின்னர் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படலாம் என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது. ஜனாதிபதி தலைமையில் அரசாங்கத்தை ஸ்தாபிக்க பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள். அமைச்சு பதவி இல்லாத காரணத்தால் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்திடைந்துள்ளமை நியாயமானதே.

அரசியலமைப்புக்கு அமைய அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணம் நிறைவு பெற்றதன் பின்னர் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படலாம்.சகல தரப்பினரது ஒத்துழைப்புடன் மாத்திரமே அரச நிர்வாகத்தை முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

பொதுஜன பெரமுன அரசியல் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு தற்போது செயற்படவில்லை. தேர்தல் ஒன்றுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் பொதுஜன பெரமுனவை முன்னிலைப்படுத்தி அரசியல் தீர்மானங்களை எடுப்போம்.

ஊடகங்களை கண்காணிக்கும் வகையில் சட்டமூலம் கொண்டு வருவது அத்தியாவசியமானது. பெரும்பாலான ஊடகங்கள் அரசியல் முகவராக செயற்படுகின்றன. நாட்டில் முறையான ஊடக கலாசாரம் பின்பற்றப்படவேண்டுமாயின் ஊடகங்களின் செயற்பாடு கண்காணிக்கப்படவேண்டும்-என்றார். (அ)

# பேராதனை மீண்டும் முதலிடம்!

கொழும்பு, ஜுன் 17

இலங்கையில் 2023 ஆண்டின் சிறந்த பல்கலைக்கழகமாக பேராதனைப் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில், தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாகவும் பேராதனைப் பல்கலைக்கழகம் முதல் இடத்தில் உள்ளமை சிறப்பம்சமாகும்.

2023 ரைம்ஸ் ஹையர் எடியுகேசன் இதழில் வெளியான தரவரிசை அறிக்கையின்படி மீண்டும் பேராதனைப் பல்கலைக்கழகம் தேர்வாகியுள்ளது.

இந்த தரவரிசையானது நிலைத்தன்மை மேம்பாட்டு இலக்குகள் உள்ளிட்ட 13 செயல்திறன் குறிகாட்டிகளை பயன்படுத்தி வகைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சி

கொழும்பு, ஜுன் 17

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய கணக்கு மதிப்பீடுகளின் கீழ் 2023 முதல் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பிற மைக்ரோ பொருளாதார குறிகாட்டிகளின் மதிப்பீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, 2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 11.5 சதவீதம் வீழ்ச்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், விவசாய பொருளாதார நடவடிக்கைகள் 0.8 சதவீதம் சிறிதளவு வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

அதே நேரத்தில் தொழில்துறை பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சேவை பொருளாதார நடவடிக்கைகள் முறையே 23.4 சதவீதம் மற்றும் 5.0 சதவீதம் பின்னடைவை பதிவு செய்ததாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023 முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகளின் பங்களிப்பு முறையே 8.0 சதவீதம், 28.7 சதவீதம் மற்றும் 58.2 சதவீதம் ஆக பதிவாகியுள்ளது. (அ)

# இந்திய பெருங்கடல் தீவில் 20 மாதங்களாக அவதிப்படும் இலங்கைத் தமிழர்கள்!

ஆலிஸ் கட்டி, சுவாமிநாதன் நடராஜன்

இந்திய பெருங்கடல் பகுதியில் சிக்கிய மீன்பிடி படகில் இருந்து மீட்கப்பட்ட டஜன் கணக்கான புலம்பெயர்ந்தோர், இந்த பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள பிரிட்டனின் ஆளுகைக்கு உட்பட்ட ஓர் தீவில் மாதக்கணக்கில் சிக்கித் தவித்து வருகின்றனர்.

இந்த வெப்ப மண்டல தீவில் இருந்து அவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல விரும்பினாலும், அங்குள்ள அசாதாரண சட்ட நடைமுறைகள் அவர்களை தீவை விட்டு வெளியேற முடியாதபடி செய்துள்ளன. அத்துடன் அவர்களை ஒருவித பயத்தில் ஆழ்த்தியுள்ளதோடு, தங்களை உதவி அற்றவர்களாகவும் உணர செய்துள்ளது.

டியாகோ கார்சியா எனும் தீவில் சிக்கி தவிக்கும் இலங்கை தமிழர்களின் (புலம்பெயர்ந்தோர்) அனைவரின் பெயர்களும் இந்த கட்டுரையில் மாற்றப்பட்டுள்ளன.

**திசைமாறிய பயணம்**

2021 அக்டோபர் மாதம் ஓர் நாள் அதிகாலை மீன்பிடிப் படகு ஒன்று டியாகோ கார்சியா தீவுக்கு அருகே சிக்கியது தெரிய வந்தது.

பிரிட்டன்- அமெரிக்க ராணுவத்தின் ரகசிய தளம் அமைந்துள்ள அந்த தீவு, மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் இருந்து பல நூறு மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது என்பதுடன், முன் அனுமதி பெறாத நபர்கள் அந்த பகுதிக்குள் பிரவேசிக்க தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அந்த எல்லைக்குள் நுழைந்த மீன்பிடி படகு குறித்த விசாரணையில் தீவின் நிர்வாகம் உடனடியாக இறங்கியது.

அந்த படகில் மொத்தம் 89 இலங்கை தமிழர்கள் இருந்ததும், அவர்கள் உள்நாட்டில் அனுபவித்த பல்வேறு இன்னல்களில் இருந்து தப்பிப் பிழைத்து அடைக்கலம் தேடி வேறு நாட்டிற்கு செல்வதும் தெரிய வந்தது. அத்துடன் அவர்கள் டியாகோ கார்சியா தீவில் தரையிறங்க விரும்பவில்லை என்பதும் தெரிந்தது.

தஞ்சம் புகுவதற்காக கனடாவை நோக்கி அவர்கள் பயணித்து கொண்டிருந்த போது, மோசமாக மாறிய வானிலையும், படகின் இன்ஜினில் ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாறும் அவர்களின் பயணத்தை திசைத் திரும்பின.

படகு ஆபத்தில் சிக்கியதால், நாங்கள் கரை ஒதுங்க அருகில் ஏதேனும் பாதுகாப்பான இடம் கிடைக்குமா என்று தேட ஆரம்பித்தோம். "அப்போது சிறிது தொலைவில் மெல்லிய வெளிச்சம் தென்படவே, டியாகோ கார்சியா தீவை நோக்கி பயணித்தோம்" என்று படகில் இருந்த ஒரு நபர் கூறினார்.

பிரிட்டன் கடற்படை கப்பல், படகை பத்திரமாக கரை ஒதுங்க செய்ததோடு, அதில் இருந்த அனைவரும் ஓர் தற்காலிக இடத்தில் தங்கவைக்கப்பட்டனர்.

20 மாதங்களுக்கு முன் இந்த சம்பவம் நிகழ்ந்தது. "ஆரம்பத்தில் படகின் இயந்திரத்தை பழுது பார்க்கும் வாய்ப்பு குறித்து மட்டும் ஆராய திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், புலம் பெயர்ந்த குழுவினர், டியாகோ கார்சியாவில் இருந்து வேறொரு நாட்டிற்கு தஞ்சம் புகுவதற்கு தேவையான முயற்சிகளை எடுக்க தங்களை வலியுறுத்தலாம் என்ற அனுமானத்தையும் நிராகரிக்க முடியாது" என்றும் தீவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.



அதிகாரிகளின் அனுமானம் அடுத்த நாளே நிஜமானது. தீவில் தஞ்சம் அடைந்திருந்த இலங்கை தமிழர்கள், அங்கிருந்த பிரிட்டிஷ் கடற்படை தளபதியிடம் ஓர் கடிதத்தை தந்தனர். அதில், "உள்நாட்டில் கடும் கொடுமைகளுக்கு ஆளாகி வந்ததால், 18 நாட்களுக்கு முன் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டில் இருந்து இந்தப் பயணத்தை தொடங்கினோம் நாங்கள் பாதுகாப்பான ஒரு நாட்டிற்கு செல்ல விரும்புகிறோம்" என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2009 இல் இலங்கை ராணுவத்தினருடன் நடைபெற்ற உள்நாட்டு போரில் வீழ்த்தப்பட்ட விடுதலை புலிகள் இயக்கத்துடன் தொடர்பில் இருந்ததாக கூறியதன் விளைவாக தாங்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டதாக அவர்களில் பலர் கூறினர். பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாகவும் சிலர் குற்றம்சாட்டினர்.

**முதல்முறையாக நிகழ்ந்த சம்பவம்**

இதனிடையே, வெளிநாட்டு பிராந்தியங்களுக்கான பிரிட்டன் இயக்குநரான பால் கேண்ட்லர் வெளியிட்டிருந்த குறிப்பில், " பிரிட்டிஷ் இந்திய பெருங்கடல் பகுதியில் இதுபோன்றதொரு தஞ்சம் கோரும் சம்பவம் முதன்முறையாக நிகழ்ந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் இலங்கை தமிழர்கள் குழுவின் வருகையை "எதிர்பாராத வருகை" எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த சம்பவம் குறித்து பிரிட்டன் அரசாங்கம் நன்கு அறிந்துள்ளது என்றும், நிலைமைக்கு விரைந்து தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" என்றும் பால் கேண்ட்லர் தமது குறிப்பில் தெரிவித்திருந்தார்.

"டியாகோ கார்சியா தீவில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கை தமிழர்கள் குழு தற்போதைக்கு வெளி உலகுடன் எந்த தொடர்பும் இல்லாமல் இருக்கின்றனர். ஆனால் நாளடைவில் இந்தச் செய்தி பரவ வாய்ப்புள்ளது" என்றும் கேண்டலரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**நரகமாக மாறிய தீவு**

இதற்கிடையே, புகலிடம் கோரி எதிர்பாராத விதமாக தீவிற்கு வந்தவர்களுக்கு, தங்களின் யதார்த்த சூழ்நிலை போகப்போக புரிய ஆரம்பித்தது.

"ஆரம்பத்தில் இங்கு நான் மகிழ்ச்சியாகவும். உயிர் தப்பியதாகவும் உணர்ந்தேன். முகாமில் உணவு அளிக்கப்பட்டது. அதுநாள் வரை அனுபவித்து வந்த கொடுமைகளில் இருந்து விடுபட்டதாகவும் உணர்ந்தேன்" என்று முகாமில் இருந்த லெக்ஷனி என்ற இலங்கை தமிழரான பெண் ஒருவர் கடந்த மாதம் எம்மிடம் கூறி இருந்தார்.



ஆனால் தங்களுக்கு அடைக்கலம் அளித்த இந்த வெப்ப மண்டல தீவு விரைவில் நரகமாக மாறியது என்றும் அவர் கூறினார்.

தன்னுடன் படகில் பயணித்து, தீவு முகாமில் தங்கியிருந்த ஒரு நபரால் தான் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானேன் என்று அந்த பெண் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

"அப்போது நான் கதறி அழுதேன். ஆனால் யாரும் உதவிக்கு வரவில்லை" என்று லெக்ஷனி கூறினார்.

தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து, அதிகாரப்பூர்வமாக புகார் அளிக்க விரும்பியதாக கூறிய அவர், ஆனால், பாலியல் வன்கொடுமையின் போது தான் உடுத்தியிருந்த துணியை துவைத்து விட்டதன் விளைவாக ஆதாரத்தை சேகரிப்பது கடினம் என்று தான் அறிவுறுத்தப்பட்ட தாகவும் தெரிவித்தார்.

தம்மை பாலியல் வன்புணர்வு செய்த நபரை வேறு கூடாரத்திற்கு மாற்ற வேண்டும் என்ற தனது கோரிக்கையை அதிகாரிகள் ஏற்கும் வரை, கிட்டத்தட்ட ஒரு வாரம் அந்த நபருடனே ஒரே கூடாரத்தில் தாமும் தங்கியிருக்க வேண்டி இருந்தது என்று பரிதாபமாகக் கூறினார் லெக்ஷனி.

ஆனால் பிரிட்டன் அரசு மற்றும் பிரிட்டிஷ் இந்திய பெருங்கடல் பிராந்திய நிர்வாகங்கள் (பிஐஓடி), இந்த குற்றச்சாட்டு தொடர்பான கோரிக்கைகளுக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை.

**தற்கொலை முயற்சி**

"முகாமில் நிலவிய சூழல் காரணமாக, தாங்கள் அல்லது தங்களுக்கு தெரிந்தவர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகினர். அதன் விளைவாக அவர்கள் தற்கொலைக்கு முயன்றனர் அல்லது தங்களை தாங்களே காயப்படுத்தி கொண்டனர். கூர்மையான ஆயுதங்களை விழுங்கியதன் விளைவாக சிலர் மூச்சுத் திணறலுக்கும் ஆளாகினர்" என்று முகாமில் இருந்த லெக்ஷனி மற்றும் சிலர் தெரிவித்தனர்.

முகாமிற்குள் குறைந்தது 12 தற்கொலை முயற்சிகள் நடத்தது குறித்தும், குறைந்தபட்சம் இரண்டு பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகள் எழுந்தது தொடர்பாகவும் நிர்வாகிகள் நன்கு அறிவார்கள் என்று புலம்பெயர்ந்தோர் தரப்பு வழக்கறிஞர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

"நாங்கள் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் சோர்வாக உணர்கிறோம். இங்கு நாங்கள் உயிர்பற்ற ஓர் வாழ்க்கையை வாழ்ந்து வருகிறோம். என்னை நான் நடைப்பிணமாக உணர்கிறேன். இதன் விளைவாக இரண்டு முறை என்னை நானே காயப்படுத்திக் கொண்டேன்" என்று கூறினார் டியாகோ கார்சியா தீவு முகாமில் இருக்கும் மற்றொரு புலம்பெயர்ந்த நபரான விதுஷன்.

பாதுகாப்பு குறித்த தனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்து, தான் அனைத்து நம்பிக்கையையும் இழந்து விட்டதாகவும், இத்துடன் வாழ்க்கை முடித்து கொள்ள முடிவு செய்ததாகவும் கூறினார் முகாமில் இருந்த மற்றொரு நபரான ஆதவன்.




தமது கணவரும் தற்கொலைக்கு முயற்சித்ததாக, சாந்தி என்ற மற்றொரு பெண் கூறினார்.

கூண்டில் அடைக்கப்பட்ட ஒரு விலங்கை போல நான் இங்கு வாழ விரும்பவில்லை என்றும் அவர் மனம் நொந்து கூறினார்.

**அதிகாரிகள் மிரட்டல்**

2021 இல் இலங்கை ராணுவ வீரர்களால் பாலியல் வன்கொடுமை மற்றும் துன்புறுத்தலுக்கு தான் ஆளாகி இருந்ததாக குற்றம்சாட்டி, மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவேன் என்று முகாமில் இருந்த ஓர் அதிகாரி மிரட்டினார். அதன் விளைவாக தான் தற்கொலைக்குத் தூண்டப்பட்டேன் என்று லக்ஷனி குற்றம் சாட்டினார்.

அவரது இந்த குற்றச்சாட்டு குறித்து, தீவில் உள்ள இலங்கை தமிழர்களின் முகாமிற்கு பாதுகாப்பு அளித்து வரும் பிரிட்டன் அரசு மற்றும் 'G4S' தனியார் நிறுவன நிர்வாகங்கள் பதிலளிக்க மறுத்து விட்டன.

தீவு முகாமில் உள்ள புலம்பெயர்ந்தவர்களை தங்களது அதிகாரிகள் எல்லா நேரங்களிலும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடத்தி வருகின்றனர் என்று அந்த நிறுவன நிர்வாகம் தெரிவித்திருந்தது.

பிஐஓடி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள புலம்பெயர்ந்தோரின் நலன் மற்றும் பாதுகாப்பு மிகவும் முக்கியம். தாங்கள் தரக்குறைவாக நடத்தப்படுவதாக அவர்கள் கூறும் குற்றச்சாட்டுகள் தீவிரமாக கருத்தில் கொள்ளப்பட்டு, அவை குறித்து முழுமையாக விசாரிக்கப்படும் என்று பிரிட்டன் அரசின் செய்தித் தொடர்பாளர் உறுதியளித்திருந்தார்.

பிஐஓடி நிர்வாகம் அங்கு முகாமில் உள்ளவர்களுக்கு சிறந்த மருத்துவ உதவிகளை வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

தீவு முகாமில் உண்ணாவிரத போராட்டங்களும் நடந்துள்ளன என்றும், இதில் குழந்தைகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அரசு வழக்கறிஞர்கள் கூறுகின்றனர்.

**செல்போன்கள் பறிமுதல்**

முகாமில் இருந்த புலம்பெயர்ந்தோரின் செல்போன்



கள் மற்றும் தொலைபேசி வசதிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். தங்களுக்கு மருத்துவ வசதி வேண்டாம் என்று தனிநபர்கள் எழுத்துபூர்வமாக விருப்பத்தை தெரிவிக்காத பட்சத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மருத்துவ சிகிச்சைகளும் திரும்பப் பெறப்பட்டன என்று முகாமில் வசிக்கும் புலம்பெயர்ந்தோர் தரப்பு வழக்கறிஞர் இந்த ஆண்டின் தொடக்கத்தில் குற்றம் சாட்டி இருந்தார்.

இந்த குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் திட்டவட்டமாக மறுத்தது பிஐஓடி நிர்வாகம். ஓர் உண்ணாவிரத போராட்டத்தின் போது பாதுகாப்பு காரணங்களுக்காக முகாமில் இருந்து கூர்மையான ஆயுதங்கள் அகற்றப்பட்டன. இதேபோன்று, முகாமில் இருப்பவர்கள் தங்களை தாங்களே காயப்படுத்தி கொள்வதை தடுக்கும் விதத்தில் தான் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று பிஐஓடி நிர்வாகம் விளக்கம் அளித்தது.

**மொரிஷியஸ் இடமிருந்து கைமாறிய தீவு**

ராணுவ தளமாக திகழும் டியாகோ கார்சியா தீவு, புகலிடம் கோரி வருவோரை தங்க வைக்கும் இடம் இல்லை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளலாம்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள டியாகோ கார்சியா உள்ளிட்ட தீவுகளை உள்ளடக்கிய சாக்கோஸ் தீவுகளை தனது காலனி ஆதிக்கத்தில் இருந்த மொரிஷியஸ் வசமிருந்து 1965 இல் பிரிட்டன் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. அதன் தொடர்ச்சியாக, டியாகோ கார்சியா தீவில் ராணுவ தளம் அமைப்பதற்காக அங்கிருந்து 1000க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# செந்தில் பாலாஜி கைது: தி.மு.கவுக்கு என்னென்ன சிக்கல்கள் ஏற்படும்?

தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜியை மோசடி வழக்கில் அமலாக்கத்துறை கைது செய்த நிலையில் வரும் 28-ஆம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க சென்னை முதன்மை நீதிமன்றம் உத்தரவிட்டது.

கைது செய்யப்பட்ட செந்தில் பாலாஜியை, ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில், அமலாக்கத் துறை முதன்மை அமர்வு நீதிபதி அல்லி முன் ஆஜர் படுத்தினர். சட்ட விரோத பண பரிவர்த்தனை வழக்கில் கைது செய்ய அமலாக்கத்துறை வாதிட்ட நிலையில், பிணையில் விடுவிக்க செந்தில் பாலாஜி தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

செந்தில் பாலாஜிக்கு பிணை கோரிய மனு தொடர்பாக வாதாடிய என்.ஆர். இளங்கோ, சட்ட விரோதமாக கைது செய்துள்ளனர். நள்ளிரவில் கைது செய்தது சட்ட விரோதமானது. மனைவியிடம் உறவினர்களிடம் சட்டப்படி கைது குறித்து தெரியப்படுத்த வேண்டும் அதை செய்யவில்லை என்று குறிப்பிட்டார்.

காவலில் எடுப்பது தொடர்பாக அமலாக்கத்துறை சார்பில் வாதம் செய்த ஏ.ஆர்.எஸ். சந்தரேசன், "விசாரணைக்கு செந்தில் பாலாஜி எந்த ஒத்துழைப்பும் வழங்கவில்லை. கைது காரணங்கள் ஏற்கனவே சொல்லப்பட்டன. கைது மெமோவை பெற மறுத்தார். கைது செய்யப்படுவோம் என தெரிந்தே அதை பெற மறுத்து விட்டார். ரிமாண்ட் செய்யப்பட்டு விட்ட நிலையில் அதை நிராகரிக்க கோர முடியாது" என்று தெரிவித்தார்.

**"செந்தில் பாலாஜி பதவியை ராஜிநாமா செய்ய வேண்டும்"**

செந்தில் பாலாஜி விவகாரம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, " செந்தில் பாலாஜி உத்தமர் என்பது போல் ஸ்டாலின் புலம்பி வருகிறார். வேண்டுமென்று பொருளாதார குற்றப்பிரிவும், வருமானவரித் துறையும் ரெய்டு நடத்துவதாகக் கூறி வருகிறார். ஸ்டாலின் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது பேசுவது ஒன்று, இப்போது பேசுவது வேறு. முதலமைச்சர் இரட்டை வேடம் போட்டு வருகிறார்.

30 ஆயிரம் கோடி குறித்து ஏதாவது செந்தில் பாலாஜி பேசிவிடுவாரோ என்ற அச்சத்தில் அனைவரும் சென்று பார்க்கின்றனர். செந்தில் பாலாஜி மீது அக்கறை இல்லை இவர்களுக்கு, வெறும் பயம்தான். செந்தில் பாலாஜி மீது ஊழல் குற்றச்சாட்டு இருப்பதால் தார்மீக பொறுப்பேற்று ராஜிநாமா செய்ய வேண்டும்" என்று கூறினார்.

**செந்தில் பாலாஜி திமுகவின் கருவூலம் - அண்ணாமலை**

இந்த விவகாரம் குறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, "உச்சநீ திமன்ற வழிகாட்டுதல்பேரில் அமலாக்கத்துறை நடவ டிக்கை எடுத்துள்ளது. செந்தில் பாலாஜி மீது விசாரணை நடத்த நீதிமன்றமே உத்தரவிட்ட பிறகு, தலைமைச் செயலகம் மற்றும் செந்தில் பாலாஜி வீடு அலுவலகங்களில் சோதனை நடந்தது எப்படி அரசியல் காழ்ப்புணர்ச்சி ஆகும்? செந்தில்பாலாஜி கைது விவகாரத்தில் அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லை. செந்தில்பாலாஜி மீது நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

திமுகவின் கருவூலமாக செந்தில் பாலாஜி மாறிவிட்டார் என்று கூறப்படுகிறது. அமைச்சர்கள், முதலமைச்சர் அவரை போய் பார்த்து சந்தித்து இதனை உறுதிப்படுத்திவிட்டனர். உடனடியாக செந்தில்பாலாஜியின் அமைச்சர் பதவியை வேறு யாருக்காவது முதலமைச்சர் வழங்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

**செந்தில் பாலாஜி மீதான வழக்கு என்ன?**

2011 முதல் 2015 வரை அதிமுக ஆட்சியில் போக்குவரத்து துறை அமைச்சராக செந்தில் பாலாஜி பதவி வகித்த போது, ஓட்டுநர், நடத்துநர் உள்ளிட்ட பணியிடங்கள் நிரப்பப்பட்ட போது முறைகேட்டில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பலர் புகார் அளித்திருந்தனர். காவல்துறை உரிய விசாரணை நடத்தவில்லை எனக்கூறி சிலர் உயர்நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்திருந்தனர்.

2018ஆம் ஆண்டு மெட்ரோ போக்குவரத்து கழக தொழில்நுட்ப ஊழியரான அருள்மணி என்பவர் போக்குவரத்து கழகத்தில் வேலைகளைப் பெற்றுத்தர பலரிடம் லஞ்சம் பெற்றப்பட்டதாக அமைச்சர் செந்தில் பாலாஜி உட்பட பலர் மீது புகார் அளித்திருந்தார். முதல் கட்ட புகார்களில் அமைச்சர் செந்தில் பாலாஜி மீது குற்றம்சுமத்தப்படவில்லை. இந்த நிலையில் அமைச்சர் செந்தில்



பாலாஜியையும் சேர்த்து லஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட வேண்டும் என வழக்கு தொடரப்பட்டது. சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் கடந்த 2018ஆம் ஆண்டு வழக்கு பதிவு செய்தனர்.

மோசடியில் சட்ட விரோத பணப் பரிமாற்றம் நடந்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில் அமலாக்கத்துறையும் வழக்கு பதிந்து விசாரணையை தொடங்கியது. மத்திய குற்றப்பிரிவு வழக்கை ரத்து செய்யும்படியும் அமலாக்கத்துறையின் விசாரணைக்கு தடை கோரியும் செந்தில் பாலாஜி உயர் நீதிமன்றத்தில் முறையிட்டார். இதில், மத்தியக் குற்றப்பிரிவு வழக்குகள் ரத்து செய்யப்பட்டு, அமலாக்கத்துறை விசாரணைக்கு தடை விதிக்கப்பட்டது.

செந்தில் பாலாஜிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கட்டுப்பாடுகள் விதித்த சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து அமலாக்கத் துறை உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

அதே சமயம் பழைய வழக்குகளை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்கிற உத்தரவை எதிர்த்து அமைச்சர் செந்தில் பாலாஜியும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். இந்த வழக்குகளை விசாரித்த உச்சநீதிமன்றம், அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான வழக்குகளை ரத்து செய்ய மறுத்ததுடன் தமிழ்நாடு காவல்துறை



முறையாக விசாரணை நடத்தி இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் கடந்த மாதம் உத்தரவிட்டது.

**திமுகவுக்கு பாதிப்பை ஏற்படுத்துமா?**

செந்தில் பாலாஜிக்கு எதிரான நடவடிக்கை திமுகவுக்கு நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும் என்று மூத்த ஊடகவியலாளர் கார்த்திகேயன் கூறுகிறார்.

"தமிழ்நாட்டில் அமைச்சராக இருக்கும் ஒருவர், அமலாக்கத்துறை சோதனையில் கைதாவது என்பது இதுதான் முதல்முறை. எனவே, திமுகவுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு என்பது அளவிட முடியாததாக இருக்கிறது" என்றார்.

மூத்த செய்தியாளர் தராசு ஷ்யாம் பேசும்போது, " இந்த விவகாரத்தை சட்டப்பூர்வமாகவும் சரி, அரசியல் ரீதியாகவும் சரி திமுக சரியாக கையாளவில்லை. இதே போன்ற சூழலை ஆம் ஆத்மி கட்சி கையாண்டதற்கும் திமுக கையாண்டதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. அவர்கள் கைது செய்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. கைது செய்ய விட்டுவிட்டு அதன் பின்னர் அரசியல் ரீதியாக அதை எடுத்து செல்கின்றனர். ஆனால், திமுகவினர் கைது செய்வதற்கே எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். " என்றார்.

தமிழ்நாட்டில் பாஜகவுக்கு எதிரான வாக்கு திமுகவுக்குதான் என்பதில் சந்தேகம் இல்லை. அதே நேரத்தில் சராசரி மக்களிடம் இந்த விவகாரம் தாக்கத்தை ஏற்படுத்தக்



கூடும் என்றும் தராசு ஷ்யாம் குறிப்பிட்டார்.

ஊழலுக்கு எதிரான கட்சி என்று பாஜக தங்களைக் கூறி வருகிறது. தங்கள் கூற்றுக்கு வலு சேர்க்க இந்த விவகாரத்தை பாஜக பயன்படுத்திக்கொள்ளும் என்று கார்த்திகேயன் தெரிவித்தார்.

அமலாக்கத்துறையின் அதிகாரம் குறித்த பேசிய தராசு ஷ்யாம், "எந்த அரசாக இருந்தாலும் விசாரணை அமைப்புகளை தவறாக நடத்தி வருகிறது என்பதை நாம் பார்த்துத்தான் வருகிறோம். ஆனால், அதிகாரிகள் சட்டப்படிதான் நடக்கின்றனர். இந்த வழக்கில் அமலாக்கத்துறை கைது செய்திருக்கக் கூடாது என்பதே தவறு. மத்திய அரசின் கீழ் வருமானம் தொடர்பான வழக்கில் கைது செய்யும் அதிகாரம் உள்ள ஒரே அமைப்பு அமலாக்கத் துறைதான். 1956ல் அமலாக்கத்துறை ஆரம்பிக்கப்பட்டபோது , அந்நிய செலாவணி ஒழுங்குமுறை சட்டத்தை மட்டும்தான் அது கவனித்து வந்தது. தாராளமயமாக்கலுக்கு பின்னர் இது **fema** ஆக மாறியது. 2002க்கு பிறகு பணமோசடி தடுப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. அமலாக்கத்துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

"2011-2015ல் செந்தில் பாலாஜி போக்குவரத்து துறை அமைச்சராக இருந்திருக்கிறார். அதன் பின்னர் 5 ஆண்டுகளுக்கு அமைச்சராக இல்லை. தற்போது வேறு துறைக்கு அமைச்சராக இருக்கிறார். அப்படியிருக்கும்போது, பழைய ரெக்கார்டு எப்படி புதிய அறையில் கிடைக்கும். நிச்சயமாக எதுவும் கிடைக்காது. செந்தில் பாலாஜியை கைது செய்ய வேண்டும் என்பதுதான் தலைமை செயலகத்தில் நடத்தப்பட்ட ரெய்டின் நோக்கம்." என்றார்.

இந்த நடவடிக்கையில் அதிமுகவுக்கு எதிரான மிரட்டலும் இருக்கலாம் என்று கூறும் கார்த்திகேயன், கூட்டணியில் தனது பிடியை இறுக்குவதற்கு இந்த நடவடிக்கையை பாஜக பயன்படுத்துக்கொள்ளும். தங்களுக்கு எதிராக செயல்படுவது, கூட்டணியை விட்டு வெளியே வர முயற்சிப்பது போன்ற நடவடிக்கைகளை எடுக்க முயன்றால் இதுபோன்ற நிலையை சந்திக்க நேரிடும் என்ற மறைமுக எச்சரிக்கையும் இதன் பின்னால் இருக்கலாம் என்றார்.

போக்குவரத்துத்துறையில் பணி வாங்கித் தருவதாகக் கூறி மோசடி செய்தார் என்று செந்தில் பாலாஜி மீது குற்றச்சாட்டப்பட்டாலும், தற்போது டாஸ்மாக்கில் நடைபெற்று வரும் விவகாரங்களும் செந்தில் பாலாஜிக்கு எதிராக திரும்பக் கூடும் என்பது ஊடகவியலாளர்களின் கருத்தாக இருக்கிறது.

இது தொடர்பாக ஷ்யாம் பேசும்போது, " செந்தில் பாலாஜி போக்குவரத்து துறை அமைச்சராக இருந்தபோது வாங்கிய லஞ்சத்திற்கான நடவடிக்கையாக இதை பார்க்கவில்லை. பணி நியமனதுக்கு லஞ்சம் வாங்கிய வழக்கை விசாரிக்க எல்லாம் அமலாக்கத்துறை வருமா? இந்த நடவடிக்கைகளை செந்தில் பாலாஜியும் திமுகவும் எதிர்பார்க்கவும் இல்லை, அவற்றை எதிர்கொள்ள தயாராக இருக்கவில்லை."

'தமிழ்நாட்டில் டாஸ்மாக்கில் குவார்ட்டருக்கு 10 ரூபாய் கூடுதலாக வசூலிக்கப்படுவது அனைவருக்குமே தெரியும். இந்த பணம் தினமும் வசூலிக்கப்படுகிறது. அந்த தொகை ஒட்டுமொத்தமாக சேர்க்கப்படுகிறது. சார்ஜ் சீட் தாக்கல் செய்ய அமலாக்கத்துறைக்கு கால அவகாசம் இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் டாஸ்மாக்கிற்கு சரக்கு விநியோகம் செய்கின்ற லாரி ஒப்பந்ததாரரிடம் விசாரணை நடத்தப்பட்டதாக தெரிகிறது. எனவே, டாஸ்மாக் மோசடி குறித்த விவகாரத்தை இதில் சேர்க்க வாய்ப்பு இருக்கிறது. " என்று அவர் தெர்வித்தார்.

"டாஸ்மாக்கில் நிதி வசூலிப்பதில் செந்தில்பாலாஜி ஈடுபடத் தொடங்கியபோதே அதனை கண்டித்திருந்தால், இந்த நிலை வந்திருக்காது, தற்போது, டாஸ்மாக் நிதி வசூல் விவகாரமும் இதனுடன் சேர வாய்ப்பு இருக்கிறது" என்று கார்த்திகேயனும் கூறினார். ●

# இந்திய பெருங்கடல் தீவில் 20 மாதங்களாக...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் ,1968 இல் மொரிஷியஸ் பிரிட்டனிடம் இருந்து விடுதலை பெற்றது. அதன்பின் இந்த தீவுகளை பராமரித்து வரும் மொரிஷியஸ் அரசு, இந்த தீவுகள் தங்களுக்கு சொந்தமானவை என்றும் உரிமை கொண்டாடி வருகிறது. ஐ.நா. நீதிமன்றமும் இந்த பிராந்தியத்தில் பிரிட்டன் ஆளுகை செலுத்தி வருவது சட்டவிரோதம் என்றும், இந்த நடவடிக்கை விரைவில் முடிவுக்கு வர வேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், சாக்கோஸ் தீவுகள் விவகாரத்தில் சர்வதேச அழுத்தத்தை விரும்பாத பிரிட்டன், வெளிப்படையான பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக கடந்த ஆண்டு இறுதிவரை கூறி வந்தது.

**அமெரிக்காவின் ஆளுகை**

சில தசாப்தங்களாக ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கின் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்த, அமெரிக்க போர் விமானங்கள் டியாகோ கார்சியா தீவில் உள்ள ராணுவ தளத்தை பயன்படுத்தி வருகின்றன. அத்துடன் பயங்கரவாதிகளாக சந்தேகிக்கப்படுபவர்களை அமெரிக்க ராணுவம் விசாரிக்கும் இடமாகவும் இத்தீவு திகழ்கிறது.

டியாகோ கார்சியா தீவு முகாம் முன்பு, கொரோனாவால் பாதிக்கப்பட்ட தங்கள் நாட்டு ராணுவ வீரர்களை தனிமைப்படுத்தும் முகாமாக பயன்படுத்தப்பட்டு வந்தது என்று லண்டன் நீதிமன்றத்தில் பிரிட்டன் அரசு தெரிவித்திருந்தது.

தற்போது இந்த முகாம், புலம்பெயர்ந்தவர்களுக்கான முகாமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. முகாம் பகுதியைச் சுற்றி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. முகாமிற்குள் அடிப்படை மருத்துவ வசதிகள் மற்றும் சிற்றுண்டிசாலை (கேன்டீன்) வசதியும் உள்ளது.

ஆனால், " நாங்கள் கூண்டில் அடைபட்ட கிளிகளாய், எவ்வித சுதந்திரமும் இன்றி இங்கு வாழ்ந்து வருகிறோம்" என்கிறார் முகாமில் உள்ள சாந்தி.

ஓராண்டுக்கு முன்பு வரை முகாமில் இருப்போருக்கு அடிப்படை கல்வி பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. ஆனால் அந்த நேரத்தில் எலிகளின் தொல்லை காரணமாக வகுப்புகள் பெரும்பாலும் முகாமிற்கு வெளியே திறந்த வெளியில் தான் நடைபெறும் என்று முகாமில் வசிப்போர் தரப்பு வழக்கறிஞர்கள் கூறுகின்றனர்.

முகாமில் இருந்த புலம்பெயர்ந்தோர்களில் சிலர் தங்களது கோரிக்கையை கைவிட்டு அல்லது நிராகரிக்கப்பட்ட பின்னர் வீடு திரும்பியுள்ளனர். இன்னும் பலர் தஞ்சம் கோரி, பிரான்ஸ் நாட்டின் ஆளுகைக்கு உட்பட்ட இந்தியப் பெருங்கடல் தீவான ரீயூனியனுக்கு சென்றுள்ளனர் என்று தீவு முகாமில் இருக்கும் இலங்கை தமிழர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் கூறினர்.

தற்போது மீதமுள்ள 60 இலங்கை தமிழர்கள் தங்களின் தலைவிதியை தீர்மானிக்கும் முடிவுக்காக டியாகோ கார்சியா தீவு முகாமில் இன்னமும் காத்திருக்கின்றனர்.

**சர்வதேச சட்டங்கள் மீறப்படுகிறதா?**

அகதிகளை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பான சர்வதேச சட்டங்களில் பிரிட்டன் கையெழுத்து இட்டுள்ளது. ஆனாலும், இந்த சட்டங்கள் பிஐஓடி பிராந்தியத்திற்கு பொருந்தாதது. ஏனெனில் இந்த பிராந்தியம் அரசியலமைப்பு ரீதியாக வேறுபட்டது மற்றும் பிரிட்டனில் இருந்து தனியானது என்று பிரிட்டன் அரசு கூறி வருகிறது.

பல்வேறு இன்னல்களையும், மனிதாபிமானமற்ற முறையிலும் நடத்தப்படும் நாட்டில் இருந்து வெளியேறியவர்களை மீண்டும் அதே நாட்டிற்கு திருப்பி அனுப்பக் கூடாது என்ற கருத்தின் அடிப்படையில். டியாகோ கார்சியா தீவு முகாமில் உள்ள இலங்கை தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதா அல்லது பாதுகாப்பான மூன்றாவது நாட்டிற்கு அனுப்புவதா என்பதை தீர்மானிக்க தனி செயல் திட்டம் நிறுவப்பட்டுள்ளது.

ஆனால் இந்த செயல் திட்டம், அகதிகளுக்கான சட்டத்திற்கு சவால் விடுவதாக இருப்பதாக கூறும் வழக்கறிஞர் டிசா கிரிகோரி, இது அடிப்படையில் நியாயமற்ற செயல் என்றும் விமர்சித்துள்ளார்.

லண்டனில் அவர் பணிபுரியும் லீ டே நிறுவனம், புகலிடம் கோரி, டியாகோ கார்சியா தீவில் தவித்து வருபவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் சீராய்வு மனுவை தாக்கல் செய்துள்ளது.

பாதுகாப்பான மூன்றாவது நாட்டை பிரிட்டன் அரசாங்கம் இன்னும் அடையாளம் காணாததால் முகாமில் இருப்பவர்களின் வாழ்க்கை நரகமாக்கப்பட்டுள்ளது என்று டிசா கிரிகோரி குற்றம்சாட்டியுள்ளார்.

இதற்கிடையே, பிஐஓடி நிர்வாகம், அதன் சட்டத்திற்கு உட்பட்டும், சர்வதேச சட்ட விதிகளுக்கு ஏற்பவும் தீவு முகாமில் உள்ள புலம்பெயர்ந்தோரின் பாதுகாப்பு கோரிக்கைகள் பரிசீலித்து வருகிறது என்று பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.

**ஐநா கவலை**

டியாகோ கார்சியாவில் உள்ள முகாமில் நிலவும் மோசமான சுகாதார நிலைமை தொடர்பான அறிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகளின் அகதிகள் அமைப்பின் பிரிட்டன் அலுவலகம் கவலை தெரிவித்துள்ளது.

"பிரிட்டனின் கட்டுப்பாட்டில் உள்ள தீவில் தஞ்சம் அடைந்துள்ளவர்களின் நலன்களை உறுதி செய்வதற்கான அனைத்து அம்சங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் இவர்களின் பாதுகாப்பை பிரிட்டன் அரசு உறுதி செய்ய வேண்டும்" என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரிட்டன் வழக்கறிஞரும், தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளருமான இமைய்லி மெக்டோனல் அண்மையில் வலியுறுத்தி இருந்தார்.

டியாகோ கார்சியாவில் தஞ்சம் புகுந்துள்ளவர்களின் கோரிக்கைகளை கருத்தில் கொள்ள போவதில்லை என்று பிரிட்டன் முடிவு செய்துள்ளதாக வழக்கறிஞர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இந்த தீவில் தஞ்சம் புகுந்த தமிழர்களில் மூன்று பேர் தற்போது மருத்துவ சிகிச்சைக்காக ருவாண்டாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தற்கொலை முயற்சி மற்றும் தங்களை தாங்களே காயப்படுத்தி கொண்ட குற்றச்சாட்டுகளின் காரணமாக, அவர்கள் டியாகோ கார்சியாவில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று பிரிட்டன் விளக்கம் அளித்துள்ளது.

ருவாண்டாவுக்கு மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பப்பட்டுள்ள மூன்று பேரில் ஒருவருக்கு கடந்த மாதம் பிஐஓடி நிர்வாகம் கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளது. அந்த கடிதத்தில், "ருவாண்டாவில் மருத்துவத்துக்கான செலவுடன், அங்கு தனியார் விடுதிகளில் தங்குவதற்கான செலவையும் பிஐஓடி நிர்வாகம் ஏற்கும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்த யோசனை உங்களுக்கு திருப்தி இல்லாதபட்சத்தில், நீங்கள் மீண்டும் டியாகோ கார்சியாவுக்கு திரும்ப ஏற்பாடு செய்யப்படும். தற்போதைய சூழலில் உங்களை வேறு நாட்டிற்கு அனுப்ப வழிகள் எதுவும் இல்லை" என்று அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, பாதுகாப்பான மூன்றாவது நாட்டிற்கு தங்களை அனுப்பும்படி கோரியிருந்த இத்தீவில் தஞ்சம் அடைந்துள்ள நான்கு பேரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இதுதொடர்பாக கோரிக்கையாளர்களில் ஒருவருக்கு இரண்டு மாதங்களுக்கு முன் பிஐஓடி நிர்வாகம் அனுப்பியிருந்த கடிதத்தில், "உங்களின் இந்த கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக அண்மையில் கிடைத்துள்ள அறிக்கையில், "டியாகோ கார்சியாவில் தஞ்சம் அடைந்துள்ள புலம்பெயர்ந்தோரின் தற்போதைய நிலைமை மாற்ற, நீண்ட கால தீர்வு காணும் நோக்கில், பிஐஓடி நிர்வாக்கத்துடன் பிரிட்டன் அரசு அயராது உழைத்து வருகிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால்,டியாகோ கார்சியா தீவில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கை தமிழர்களை, பாதுகாப்பான மூன்றாவது நாட்டிற்கு அனுப்புவதற்கான தெளிவான காலக்கெடு வரையறுக்கப்படாமல் உள்ளதும், இந்த விவகாரத்தில் உள்ள சட்ட சிக்கலும் இவர்களின் நிலையை தொடர்ந்து இழுபறியாகவே வைத்திருக்கக்கூடும்.

"20 மாதங்கள் நீண்ட காத்திருப்பு பிறகு நாங்கள் அனைவரும் நம்பிக்கை இழந்துவிட்டோம்" என்று விரக்தியுடன் கூறுகிறார் டியாகோ கார்சியா தீவில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கை தமிழர் ஒருவர்.






# வெளிநாட்டில் வேலை தருவதாக கூறி 1 கோடியே 80 இலட்சம் ரூபா மோசடி!

## மட்டக்களப்பில் ஒருவர் கைது

**மட்டக்களப்பு, ஜூன் 15**

**மட்டக்களப்பில் வெளிநாட்டில் வேலை பெற்று தருவதாக பல பேரிடம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாவை வாங்கி மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டு வேலை வாய்பு முகவர் நிலை உரிமையாளர் தலைமறைவை அடுத்து கைது செய்யப்பட்ட முகாமையாளரை எதிர் வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் பீற்றர் போல் நீதிமன்றித்தில் உத்தரவிட்டார்.**

மட்டக்களப்பு-திருகோணமலை வீதியில் அமைந்துள்ள சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றின் உரிமையாளரும் அதன் முகாமையாளர் மற்றும் துணை முகவர்கள் இணைந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை பெற்று தருவதாகக் கூறி பல பேரிடம் சுமார் 1 கோடியே 80 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளனர்.

இந்த நிலையில் சிலர் குறித்த முகவர் நிலையத்தின் துணை ஏஜன்சி மூலமாவும் முகவர் நிலைய உரிமையாளரிடம் நேரடியாகவும் சிலர் முகாமையாளர் ஊடாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பல இலட்சம் ரூபா பணத்தை வழங்கிய நிலையில், அவர்களில் சிலரை வேலைக்கு அனுப்புவது போல சுற்றுலா விஸாவில் டுபாய் மற்றும் கட்டார் நாட்டுக்கு அனுப்பியுள்ளனர்.

அவர்கள் அங்கு சென்று தொழில் இல்லாது கைவிடப்பட்டு நடு வீதியில் நிர்க்கதியான நிலையில் தங்களது உறவினருடன் தொடர்பு கொண்டு தமது சொந்தப் பணத்தைச் செலுத்தி விமானச்சீட்டை பெற்றுக் கொண்டு நாடு திரும்பினர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்கள் வெளிநாட்டு வேலை பெற்று தருவதாக மோசடியில் ஈடுபட்ட துணை ஏஜன்டுகளுக்கு எதிராக மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இரு துணை ஏஜென்ட்டுகள் கடந்த மாதம் கைது செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சுமார் ஒருவரிடம் 6 இலட்சம் ரூபா வரை பணத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களை மட்டக்களப்பிலுள்ள பிரதான முகவர் ஊடாக அனுப்பியுள்ளதாகவும் தெரிய வந்ததையடுத்து, அவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதனையடுத்து அந்த பிரதான முகவர் நிலையம் தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு பொலிஸார் அறிவித்த தகவலை அடுத்து இது சட்ட விரோதமாக இயங்கி வருவதாக தெரியவந்தது.

இந்த நிலையில் அங்கு கடமையாற்றி வந்த முகாமையாளர் 4 இலட்சம் ரூபாவுக்கு அதிகமாக பணத்தை மோசடியாக பெற்றுள்ளதாக இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில்-சித்தாண்டி, கொக்கட்டிச்சோலை, வாழைச்சேனை போன்ற பல பிரதேசங்களிலுள்ள பலரிடம் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக தானும் ஏனைய துணை ஏஜன்சிக்காரர்களும் பல இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு அதனை முகவர் நிலைய உரிமையாளரிடம் வழங்கியுள்ளதாகவும்,

இந்த முகவர் நிலைய உரிமையாளர் வெளிநாட்டு வேலை பெற்று தருவதாக பலரிடம் சுமார் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபா வரை பெற்றுள்ளதாகவும் அவர் கொக்கட்டிச்சோலை, முனைக்காட்டைச் சேர்ந்தவர் எனவும் அவர் தற்போது தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட முகாமையாளர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதே வேளை குறித்த முகவர் நிலைய உரிமையாளர், முகாமையாளர் மற்றும் அந்த முகவர் நிலையத்தின் துணை ஏஜென்சிகாரர்களுக்கு எதிராக இதுவரை சுமார் 50 இலட்சம் பண மோசடி தொடர்பாக 15 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அக்கரைப்பற்று ஆண்கள் பாடசாலைக்கு தளபாடம்



அக்கரைப்பற்று, ஜூன் 17

அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் பாடசாலையின் பழைய மாணவர்களின் நிதியுதவியில் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 11 இலட்சம் ரூபாய் பெறுமதியான தளபாடம் பழைய மாணவர் சங்கத்தினால் பாடசாலைச் சமூகத்திடம் கையளிக்கப்பட்டது.

பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளரும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர். றஜாப், பாடசாலை அதிபர் ஏல்.எல். அப்துல் ஜெலீல் தலைமையிலான பாடசாலை நிர்வாகத்திடம் இத்தளவாடங்களை கையளித்தார்.

தரம் 10 மற்றும் 11 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுள்ள இப்பாடசாலையில் நிலவும் ஆளணி மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறை தொடர்பில் பழைய மாணவர் சங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதனடிப்படையில், தற்போது இங்குள்ள ஆசிரியர்களுக்கு மேலதிகமாக அவசியமான சில பாடங்களைக் கற்பிப்பதற்காக வெளியில் உள்ள தகுதிவாய்ந்த வளவாளர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, பாடசாலையில் நீண்ட காலமாக நிலவி வரும் தளபாடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்பை பெற்றுக்கொண்டு 80 மாணவர் மேசைகள், கதிரைகள், ஆசிரியர் மேசைகள், மற்றும் வெண் பலகைகள் ஆகியவை தற்போது அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இரு வகுப்பறைகள் புதுப்பொலிவூட்டப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பாடசாலை அதிபர் ஏ.எல்.ஏ. ஜெலீல்- தரம் 10, 11 இற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கும், வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு வரும் பழைய மாணவர் சங்கத்திற்கும் அபிவிருத்தி சங்கத்திற்கும் பழைய மாணவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக கூறினார். (அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்கத்துக்கு புதிய தலைவர்

அம்பாறை, ஜூன் 17

தென்கிழக்கு பல்கலைகழக ஊழியர் சங்கத்தின் 23ஆவது வருடாந்த ஒன்றுகூடல், சங்கத்தின் தலைவர் எம்.எம். நௌபர் தலைமையில், ஒலுவில் வளாக தொழில்நுட்பபீட கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக பிரதிப் பதிவாளர் எஸ்.சிவக்குமார் மற்றும் பதில் நிதியாளர் சீ.எம். வன்னியாராச்சி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இரண்டு அமர்வுகளாக இடம்பெற்ற நிகழ்வின் முதல் அமர்வில் பல்கலைக்கழகத்தில் தாங்களது 25 வருடகால சேவையை பூர்த்தி செய்தவர்களும் சேவைக்காலத்தின்போது மிகக் குறைந்த அளவான விடுமுறையை எடுத்தவர்களும் இங்கு கடமையாற்றி வேறு பல்கலைக்கழகங்களுக்கு பதவி உயர்வு பெற்றுச்சென்றவர்களும் ஊழியர் சங்கத்தால் பாராட்டி, நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் இரண்டாவது அமர்வின்போது, புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது.

குறித்த தெரிவில் சில பதவிகளுக்காக உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

சில பதவிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருந்ததன் காரணமாக குறித்த பதவிகளுக்கு உறுப்பினர்களை தெரிவதற்காக இடம்பெற்ற தேர்தலின்போது அதிகப்படியான வாக்குகளைப்பெற்று புதிய தலைவராக சிரேஷ்ட உத்தியோகத்தர் எம்.ரீ. முஹம்மது தாஜுதீனும் செயலாளராக எம்.எம். முஹம்மது காமிலும் தெரிவாகினர். (அ)



# பல் சமயத்தினூடாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் அமர்வு மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஜூன் 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்சமயத்தினூடாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் செயலமர்வு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகத்தின் ஒழுங்கமைப்பில் நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மாவட்டத்தில் இனங்கள், மதங்களுக்கிடையில், சகவாழ்வு நல்லுறவு, புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய தலைவர்களின் பங்களிப்புடன் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த உதவி மாவட்ட செயலாளர் மனித குல நல்வாழ்வை மேம்படுத்த உதவும் போதனைகளை மக்கள் மத்தியில் முன்னெடுத்து சகோதரத்துவம், ஐக்கியம், பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தும் நற்பணியினை மேற்கொள்ள அனைவரும் ஈடுபட வேண்டும் என்றார்.

இச் செயலமர்வில் மும்மத தலைவர்களின் அனுபவ பகிர்வும் கலந்துரையாடலும் இடம் பெற்றதுடன் இலங்கை தேசிய சமாதான பேரவையின் செயற்திட்ட முகாமையாளர் எம். உவைஸ் வளவாளராக செயற்பட்டார்.

இந் நிகழ்வில் இஸ்லாமிய கலாசார உத்தியோகத்தர் எம். யேனுலாப்தீன் இந்து சமய கலாசார உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# சிறுவர் சபைக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகத்தில் காணப்படும் சிறுவர் சபைக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பிரதேச சிறுவர் சபையூடாக சிறுவர்களின் உடல் உள ரீதியான ஆரோக்கியத்தை மேம்படுத்தல் மற்றும் பங்கேற்பு உரிமையை வழங்கும் நோக்கில் மாவட்ட செயலகத்தினால் யுனிசெப் நிறுவனத்திடம் முன்வைக்கப்பட்ட வோண்டுகோளுக்கு அமைவாக கிடைக்கப்பெற்ற விளையாட்டு உபகரணங்கள் கச்டந்த வியாழக்கிழமை பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டது.

# படகு அனர்த்தத்தில் 80 குடியேறிகள் பலி!

## பல நூறுபேரைக் காணோம்!! கிறிஸ் நாட்டின் அருகே கடலில் நேர்ந்த அவலம்






எதென்ஸ், ஜூன் 17

**நூற்றுக்கணக்கான வெளிநாட்டுக் குடியேறிகளை ஏற்றி வந்த மீன்பிடிப் படகு ஒன்று கிறிஸ் நாட்டின் தென் பகுதிக் கடற்பரப்பில் கவிழ்ந்ததில் குறைந்தது 79 பேர் உயிரிழந்தனர். நூறு பேர் வரை மீட்கப்பட்டுள்ளனர்.**

மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமற்போயிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடும் நோக்கில் லிபியா வழியாகப் புறப்பட்ட சிரியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஆபிரிக்க, ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அந்தப் படகில் பயணித்துள்ளனர் என்பது உதவி கோரி விடுக்கப்பட்ட செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஐரோப்பிய எல்லைக் கண்காணிப்பு முகவரகமான ஃபுரொண்டெக்ஸின் கண்காணிப்பு விமானம் ஒன்றே அந்தப் படகைக் கடந்த செவ்வாய்கிழமை மாலை முதன் முதலாகக் கடலில் கண்டுபிடித்தது.

பின்னர் சில மணி நேரத்தில் அது கிறிஸ் நாட்டின் தெற்கு கடலில் பெலபோனீஸ் தீபகற்பம் அருகே ஆழ் கடலில் மூழ்கிக் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

லிபியாவில் இருந்து இத்தாலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த அந்தப் படகில் குறைந்தது 750 பேராவது பயணம் செய்திருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சுமார் 75 குழந்தைகளும் அதில் இருந்துள்ளனர். பலர் படகின் அடித்தளத்தில் அடைக்கப்பட்டுப் பூட்டி வைக்கப்பட்டிருந்தனர் என்றும் கூறப்படுகிறது. ஆட்களைக் கடத்தும் கப்பல் முகவர்கள் கப்பலில் குழப்பம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக இவ்வாறு ஆட்களை அடைத்து வைப்பது வழக்கம் என்று கூறப்படுகிறது.

கிறிஸ் கரையோரக் காவல் படையினரும் தொண்டுப் பணியாளர்களும் புதன்கிழமை காலை மிகப் பெருமெடுப்பிலான மீட்புப் பணியைத் தொடக்கினர். கடும் கொந்தளிப்புக்கு மத்தியில் மூழ்கிக் கொண்டிருந்த கப்பலில் இருந்து 104 பேரை மீட்டனர்.

78சடலங்கள்வரை கடலில் மிதப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அவற்றில் முப்பதுக்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்பட்டுக் கரைக்குக் கொண்டு வரப்பட்டன. படகில் 750 பேர் வரை பயணித்தனர் என்பதால் பல நூற்றுக் கணக்கானவர்கள் நீரில் மூழ்கியிருக்கலாம் என்றும் அதனால் உயிரிழப்பு எண்ணிக்கை பல மடங்காக அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்றும் மீட்புப் பணியாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

படகில் இருந்த எவருமே உயிர்காப்பு அங்கிகளை அணிந்திருக்கவில்லை.

அவர்கள் கப்பல் மூழ்கும் கட்டத்திலும் உதவிகள் எதனையும் ஏற்க மறுத்துத் தாங்கள் எப்படியாவது இத்தாலி சென்றடைந்து விட வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தனர் என்று மீட்புப் பணியில் ஈடுபட்டோர் கூறியுள்ளனர். இதே வேளை, குடியேறிகளைப் படகில் கடத்தி வந்தவர்கள் என நம்பப்படுகின்ற எகிப்து நாட்டுப் பிரஜைகள் ஒன்பது பேரைக் கிறிஸ் அதிகாரிகள் கைதுசெய்திருக்கின்றனர்.

இந்த ஆண்டில் நிகழ்ந்த பெரும் குடியேறிகளது கடல் அனர்த்தம் என்று கூறப்படுகின்ற இந்தச் சம்பவத்தை அடுத்து கிறிஸ் அரசு மூன்று நாள்கள் தேசிய துக்கம் அறிவித்திருக்கிறது.

(அ)

# பிரித்தானிய மன்னர் சாள்ஸின் பிறந்த நாள் இளவரசர் ஹாரி, மேகனுக்கு அழைப்பில்லை



லண்டன், ஜூன் 17

பிரித்தானிய மன்னர் சாள்ஸ் பிறந்தநாள் விழாவில் பங்கேற்க இளவரசர் ஹாரி, மேகன் மேர்க்கல் தம்பதிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்த தகவலை இன்டிபென்டன்ட் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவின் புதிய மன்னர் சாள்ஸ் ஆட்சியின் கீழ் இந்த ஆண்டு இது முதல் முறையாக கொண்டாடப்படும்.

இன்று சனிக்கிழமை கொண்டாட்டம் நடைபெறும்.

விழாவில் 1,400 வீரர்கள், 400 குதிரைகள் மற்றும் 400 இசைக்கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.

இராணுவ இசைக்குழுவினர் நிகழ்ச்சி நடத்துவார்கள்.

பின்னர் அரச குடும்பம் பக்கிங்ஹாம் அரண்மனையின் பால்கனியில் கூடி இராணுவத்தின் அணிவகுப்பை ஏற்பார்கள்.


அரச விமானப் படையால் வண்ணமயமான சாகசம் நடத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இளவரசர் ஹாரி மற்றும் மேகனுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

கடந்த ஆண்டு மகாராணி எலிசபெத் தலைமையின் கீழ் நடந்த கொண்டாட்டத்தில் இருவரும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# 93 மணி நேரத்துக்கும் மேல் இடைவிடாமல் சமைத்து கின்னஸ் சாதனை படைத்த பெண்



அபுஜா, ஜூன் 17

நைஜீரியாவைச் சேர்ந்த சமையல் கலை நிபுணர் ஹில்டா பாஸ்ஸி மிக நீண்ட நேரம் ஓய்வின்றி சமைத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

93 மணி நேரம், 11 நிமிடங்களுக்கு நின்றபடியே அவர் சமைத்து சாதித்துள்ளார்.

நான்கு நாட்கள் சளைக்காமல் அந்த முயற்சியில் ஈடுபட உடற்பயிற்சிக் கூடத்தில் ஹில்டா பாஸ்ஸி பயிற்சி பெற்று கொண்டுள்ளார்.

இதேவேளை, இதற்கு முன்னர் இந்தியாவைச் சேர்ந்த சமையல்காரர் ஒருவர் 87 மணிநேரம், 45 நிமிடங்களுக்குத் தனியாகச் சமைத்து கின்னஸ் சாதனையைப் புரிந்திருந்தார்.

இந்த சாதனையை முறியடித்து தற்போது நைஜீரியாவைச் சேர்ந்த சமையல் கலைநிபுணரான ஹில்டா பாஸ்ஸி புதிய சாதனை படைத்துள்ளார். அவருக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றது.

(அ)

# உலகெங்கிலும் இடம்பெயர்ந்த 110 மில்லியன் மக்கள் உள்ளனர்

## அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் சுட்டிக்காட்டு



ஜெனிவா, ஜூன் 17

உலகெங்கிலும் 110 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் உலகளாவிய ரீதியில் கட்டாய இடப்பெயர்வு அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மோதல்கள் மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக இந்த இடம்பெயர்வுகள் அதிகரித்துள்ளதாகவும், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும் செல்வந்த நாடுகளை விட மற்றைய நாடுகளே இடம்பெயர்ந்த நபர்களை ஏற்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற உக்ரைன் மற்றும் ரஷ்யா போரே இந்த இடம்பெயர்வு அதிகரிப்பிற்கான முதன்மைக் காரணமாகவும் 2021ஆம் ஆண்டின் இறுதியில் 27,300 ஆக இருந்த அகதிகளின் எண்ணிக்கை இந்த ஆண்டின் இறுதியில் 5.7 மில்லியனாக உயர்ந்தது எனவும் இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மிகப்பெரிய அகதிகள் வெளியேற்றம் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும் ஈரானில் ஆப்கானிஸ்தான் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.

# ஆசிய கிண்ணத் தொடர்; இலங்கை, பாகிஸ்தானில்

## உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியீடு




புதுடில்லி, ஜூன் 17

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரும் ஒகஸ்ட் 31 முதல் செப்ரெம்பர் 17 வரை பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் நடைபெறும் என்று ஆசிய கிரிக்கெட் சபை அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய 6 அணிகள் இந்த ஆசிய கிரிக்கெட் கிரிக்கெட் தொடரில் விளையாடுகின்றன.

இந்தமுறை பாகிஸ்தான் அணி தொடரை நடத்துகிறது. ஆனால், இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்தது. இதைத் தொடர்ந்து மாற்றுத் திட்டம் முன்வைக்கப்பட்டது.

ஆசிய கிரிக்கெட் சபை ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி இந்திய அணி பங்கேற்காத 4 போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறும். மீதம் உள்ள 9 போட்டிகள் இலங்கையில் நடத்தப்படும். இதில் பங்கேற்றுள்ள 6 அணிகளும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் ஆகிய அணிகள் ஒரே பிரிவில் உள்ளன. மற்றொரு பிரிவில் இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் இடம் பெற்றுள்ளன. லீக் சுற்றின் முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் தலா இரு அணிகள் சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறும். இந்த சுற்றில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதி போட்டியில் பலப்பரீட்சை நடத்தும். பாகிஸ்தானில் லாகூரிலும், இலங்கையில் கண்டி மற்றும் பல்லேகலையிலும் போட்டிகள் நடைபெறுகின்றன.

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டுள்ளதால் இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள 50 ஓவர் உலகக் கிண்ணத் தொடரில் அந்த அணி கலந்து கொள்வதில் எந்தவித சிக்கலும் இருக்காது என்று கருதப்படுகிறது.



## மெஸ்ஸி அதிவிரைவு கோல் ஆர்ஜென்ரீனா அபார வெற்றி!

பீஜிங், ஜூன் 17

உலக சம்பியனான ஆர்ஜென்ரீனா - அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்ட போட்டி பீஜங் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் அவுஸ்திரேலிய அணி தடுப்பாட்டக்காரர்களிடம் பந்தை பிடிகொடுக்காமல் கடத்திச் சென்றார் ஆர்ஜென்ரீனா அணியின் நட்சத்திர வீரரான லயோனல் மெஸ்ஸி.

ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்திலேயே மெஸ்ஸி கோல் அடித்தார். இது ஆர்ஜென்ரீன அணிக்காக அவர் அடித்த அதிவேக கோலாக அமைந்தது.

இந்த ஆட்டத்தில் அர்ஜெண்டினா 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மெஸ்ஸி 2ஆவது நிமிடத்திலும், ஜெர்மன் பெசெல்லா 68ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். (ஐ)



## ஆப்கானுக்கு 662 ஓட்டங்களை இலக்காக்கியது பங்களாதேஷ்

டாக்கா, ஜூன் 17

பங்களாதேஷ் அணிக்கு எதிராக இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் ஆப்கானிஸ்தான் அணிக்கு 662 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி டாக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலில் துடுப்பபெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்சில் 382 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக ஷான்டோ 146 ஓட்டங்கள் குவித்தார்.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 146 ஓட்டங்களில் சுருண்டது. இதனை தொடர்ந்து 236 ஓட்டங்கள் முன்னிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 2-வது இன்னிங்சில் ஷான்டோ மற்றும் மொமினுல்லின் சதத்தால் 4 விக்கெட்கள் இழப்புக்கு 425 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதனால் ஆப்கானிஸ்தானுக்கு 662 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# நேஷன்ஸ் லீக் உதைபந்தாட்டம் இறுதிப் போட்டியில் குரோஷியா

ரோட்டர்டாம், ஜூன் 17

ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கங்களின் கூட்டமைப்பின் நேஷன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடரில் நெதர்லாந்து அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது குரோஷியா அணி.

ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கங்களின் கூட்டமைப்பின் நேஷன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடரின் அரை இறுதி ஆட்டம் ரோட்டர்டாம் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் குரோஷியா - நெதர்லாந்து அணிகள் மோதின. 34ஆவது நிமிடத்தில் டோனியேல் மலன் அடித்த கோலால் நெதர்லாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. 55ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் காக்போ தவறான ஆட்டம் ஆடினார்.

இதனால் குரோஷியா அணிக்கு தண்டனை உதை வாய்ப்பு வழங்கப்பட்டது. இதில், அண்ட்ரேஜ் கிராமரிக் கோல் அடிக்க ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையை எட்டியது. 72ஆவது நிமிடத்தில் குரோஷியா 2ஆவது கோலை அடித்தது. லூகா இவானுசெக், நெதர்லாந்து அணியின் 4 தடுப்பாட்ட வீரர்களுக்கு ஊடாக தட்டி விட்ட பந்தை மரியோ பசாலிக் கோல் வலைக்குள் திணிக்க குரோஷியா 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. 90 நிமிடங்களின் முடிவிலும் இதே நிலையே இருந்தது.

இதன் பின்னர் காயங்களுக்கு இழப்பீடாக 6 நிமிடங்கள் வழங்கப்பட்டன. இதன் கடைசி நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் நோவாலாங் கோல் அடித்து அசத்தினார். இதனால் ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையை எட்டியது. இதையடுத்து வெற்றியை தீர்மானிக்க கூடுதல் நேரம் வழங்கப்பட்டது.

98ஆவது நிமிடத்தில் குரோஷியா வீரர் புரூனோ பெட்கோவிக் உதைத்த பந்து கோல் வலைக்குள் பாய்ந்தது. இதனால் குரோஷியா 3-2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. 109ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் ஸ்டீவன் பெர்க்வின் இலக்கை நோக்கி வலுவாக அடித்த பந்தை குரோஷியா கோல் காப்பாளர் டொமினிக் லிவகோவிக்கின் மீது பட்டு விலகிச் சென்றது. அதை கோல் கம்பத்தின் அருகில் நின்ற நோவா லாங் கோலாக மாற்றத் தவறினார்.

116ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் டைரல் மலசிய தவறான ஆட்டம் ஆடினார். இதனால் குரோஷியாவுக்கு தண்டனை உதை வாய்ப்பு வழங்கப்பட்டது. இதை 37 வயதான லூகா மோட்ரிக் கோலாக மாற்ற குரோஷியா 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.



ஈழநாடு



# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு 90 இலட்சம் வாக்குகள்

## பாலித தேவரப்பெரும ஆருடம்



கொழும்பு, ஜூன் 17

**அடுத்த ஜனாதிபதி தேர்தலில் 90 லட்சத்துக்கும் அதிக மான வாக்குகளை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பெறுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பி னரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாலித தேவ ரப்பெரும தெரிவித்தார்.**

"ரணில் விக்கிரமசிங்க தூர நோக்கு சிந்தனை உடைய அரசி யல்வாதி. ஆசியாவிலேயே மிக வும் சிறந்த ஆளுமை அவர். உலகை ஆளக்கூடிய வல்லமை கூட உள்ளது. குடும்ப அரசியல் நடத்தியவர் கிடையாது.

எமது நாட்டை நெருக்கடி யில் இருந்து அவர் மீட்டார். மக்களுக்கும் இது தெரியும். எனவே, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவர் அமோக வெற் றிபெறுவார். கடைசியில் சஜித் பிரேமதாசவும் ரணில் பக்கம் வருவார்." எனவும் பாலித தேவ ரப்பெரும குறிப்பிட்டார். (அ)

# 2 பஸ்கள் மோதி விபத்து; 5 மாணவர்கள் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 17

பண்டாரவளை - தியத்த லாவை பிரதான வீதியின் கஹ கொல்ல பகுதியில் இன்று காலை பாடசாலை பஸ்ஸொன் றும் தனியார் பஸ்ஸொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளானதில் 5 பாடசாலை மாணவர்களும் சாரதியும் காய மடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 6.30 மணிய ளவில் விபத்து நடந்ததை அடுத்து, குறித்த பகுதியூடான போக்குவ ரத்து பாதிக்கப்பட்டிருந்தது டன், மாற்று வழிகளைப் பயன் படுத்துமாறும் பொலிஸார் அறி வுறுத்தல் வழங்கினர்.

காயமடைந்த மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ள நிலையில், அவர் களின் நிலை கவலைக்கிடமாக இல்லை என்று தெரிவிக்கப்பட் டது.

அதேநேரம் விபத்து தொடர் பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ள னர். (அ)

# யாழ். முகாமைத்துவ பீட மாணவர்கள் 28 பேருக்கு உள்நுழைவுத் தடை நீக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணப் பல்கலைக்க ழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் ஏற் பட்ட குழு மோதல் சம்பவத்தின் அடிப்படையில் உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டிருந்த மாண வர்களில் 28 பேர் மீதான தடை பூர்வாங்க விசாரணைகளின் முடிவில் நீக்கப்பட்டுள்ளதுடன், அடையாளப்படுத்தப்பட்ட மூன்று மாணவர்கள் மீது தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்க ளின் "மாகோஸ்" வார நிகழ்வு கள் கடந்த மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில்-இம்மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன் றாம் வருட மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற விளை யாட்டு நிகழ்வில் ஏற்பட்ட தக ராறு கைகலப்பாக மாறி மோத லில் முடிந்தது.

இதனால் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் தலையில் படு காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதனையடுத்து சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக் கும், மூன்றாம் வருட மாணவர் கள் 15 பேருக்கும் கல்விச் செயற் பாடுகளில் ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக் கழ கத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப் பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பி லான பூர்வாங்க விசாரணைகள் கடந்த வாரம் இடம்பெற்றது. விசாரணைகளின் முடிவில் சம்ப வத்துடன் சம்பந்தப்பட்டவர் கள் என அடையாளப்படுத்தப் பட்ட இரண்டாம் வருட இரண் டாம் அரையாண்டு மாணவர் கள் 03 பேரைத் தவிர ஏனைய 28 பேர் மீது விதிக்கப்பட்டி ருந்த உள்நுழைவுத் தடை விலக் கப்பட்டுள்ளது என்று முகாமைத் துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரி யர் பா. நிமலதாசன் அறிவித்துள் ளார்.

பூர்வாங்க விசாரணைகளின் போது அடையாளப்படுத்தப் பட்ட மாணவர்கள் பல்கலைக் கழக மாணவர் வதிவிடம் மற் றும் ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விதிமுறைகளுக் கமைவாகப் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையி னால் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், பூர்வாங்க விசாரணைக் குழுவி னால் பரிந்துரைக்கப்பட்ட நட வடிக்கைகள் பேரவையின் தீர் மானத்துக்காகச் சமர்ப்பிக்கப்ப டவுள்ளன. (அ)

# கணவரை பிரிந்து வாழும் பெண் சுட்டுக் கொலை!

கொழும்பு, ஜூன் 17

திருமணமாகிக் கணவனைப் பிரிந்து வாழ்ந்த வந்த பெண் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பொலன றுவை மாவட்டம், மெதிரிகிரிய பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.

குறித்த துப்பாக்கிச்சூட்டில் மிரிசேன மீனவ கிராமத்தில் வசிக்கும் 36 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண், தாய் வீட் டுக்குச் சென்றுவிட்டு தனது வீட் டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது, அவரது தாய் வீட்டின் முன் மறைந்திருந்த நபர் ஒருவர் குறித்த பெண்ணை நோக்கித் துப்பாக்கியால் சுட்டுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் படுகாய மடைந்த பெண் மெதிரிகிரிய வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட நிலையில் உயிரிழந்துள் ளார்.

பிரிந்து சென்ற கணவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாகத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டி ருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய சந் தேகநபர் தப்பிச் சென்றுள்ளது டன், அவரை கைது செய்வதற் கான விசாரணைகளை மெதிரி கிரிய பொலிஸார் ஆரம்பித்துள் ளனர். (அ)

# ஜனாதிபதிக்கான ஆதரவை விலக்கும் எண்ணம் இல்லை

## கூறுகின்றார் ஜோன்ஸ்டன்

கொழும்பு, ஜூன் 17

"பதவி என்னை தேடிவருமே தவிர நான் பதவியை தேடி சென் றதில்லை. யாரிடமும் அமைச் சுப் பதவியை கோரியதும் கிடை யாது." என்று பொதுஜன பெர முன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர் ணான்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு வழங்கும் ஆதரவை நிறுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் கூறினார்.

பஸில் ராஜபக்ஷ தலைமை யில் மொட்டு கட்சி தலைமை யகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளி யிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"ஜனாதிபதிக்கான எமது ஆத ரவு தொடரும். அவருக்கு வழங் கும் ஆதரவை நிறுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. பொது ஜன பெரமுன கட்சி பலமாகவே உள்ளது. எந்தவொரு தேர்தலை எதிர்கொள்ளவும் நாம் தயார்." எனவும் ஜோன்ஸ்டன் பெர் ணான்டோ குறிப்பிட்டார். (அ)

# ஓய்வு பெற்ற ஜனாதிபதிக்கான சலுகை கோட்டாவுக்கு உண்டா?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி

கொழும்பு, ஜூன் 17

கோட்டாபய ராஜபக்ஷ என் பவர் பொதுமக்களின் எதிர்ப் பலை காரணமாக ஜனாதிபதி பதவியை விட்டும் தப்பியோடி யவர் என்ற நிலையில், அவருக்கு ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளுக் கான சலுகைகள் வழங்கப்பட் டுள்ளதா என முஜிபுர் ரஹ்மான் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு அவர் அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

கோட்டாபய பதவியை விட் டுச் சென்றபின் அவருக்கு அர சாங்கத்தின் சார்பில் உத்தியோ கபூர்வ இல்லமொன்று வழங்கப் பட்டுள்ளதா? அவ்வாறெனில் அதனை பராமரிக்க மாதாந்தம் செலவிடப்படும் தொகை? அவ ருக்கு உத்தியோகபூர்வ இல்லம் ஒதுக்கப்பட்ட பின்னர் பராம ரிப்புக்காக இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள தொகை?

கோட்டாபய மற்றும் அவரது அலுவலக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்க ளின் எண்ணிக்கை? என்பன குறித்தும் தகவல்களை வெளியி டுமாறு முஜிபுர் ரஹ்மான் கோரி யுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச்சட் டத்தின் கீழ் அவர் இந்தக்கடி தத்தை ஜனாதிபதி செயலகத் துக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாதச் சம்பளத்தை கல்விக்காக அர்ப்பணித்த சப்ரகமுவ ஆளுநர்



கொழும்பு, ஜூன் 17

"சிறப்புரிமைகளை பெறுவ தற்காக நான் ஆளுநர் பதவியை ஏற்கவில்லை. சப்ரகமுவ மாகாண மக்களுக்கு சேவையாற்றுவதே எனது நோக்கம். எனவே, எனது மாத சம்பளத்தை கல்விக்காக வழங்குகின்றேன்."

-இவ்வாறு சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸா நாயக்க தெரிவித்தார்.

" எனது சம்பளம் கல்வி அமைச்சுக்கு வழங்கப்படும். அதன்மூலம் கேகாலை, இரத்தி னபுரி பகுதியில் உள்ள மாண வர்களுக்கு கொப்பி, புத்தகம் உள்ளிட்டவற்றை வாங்குவதற்கு அது பயன்படுத்தப்படும்."- எனவும் நவீன் குறிப்பிட்டார். (அ)

# களுத்துறை இ.போ.ச. முகாமையாளர் கைது!

கொழும்பு, ஜூன் 17

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட் டில் இலங்கைப் போக்குவரத் துச் சபையின் களுத்துறை பிராந் திய அலுவலகத்தின் முகாமை யாளர் கைது செய்யப்பட்டுள் ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பாணந் துறை டிப்போவின் சாரதி ஒரு வர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இலஞ்ச ஊழல் விசா ரணை ஆணைக்குழுவின் விசா ரணை அதிகாரிகள் இந்த சுற்றி வளைப்பை மேற்கொண்டனர்.

பாணந்துறை டிப்போவில் சாரதிப் பணி நியமனத்திற்காக 15,000 ரூபா இலஞ்சம் கேட்டுள் ளார் முகாமையாளர். இலஞ்சப் பணம் வழங்கப்பட்டபோது பாணந்துறை இலங்கை போக்கு வரத்துச் சபையின் டிப்போ வளா கத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். (அ)

## ஹன்ரர்...

இந்த விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

வவுனியா - பூவரசன்குளம் - கன்னாட்டி பகுதியில் நேற்று காலை 7 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அந்த இடத்தை சேர்ந்த சிவலோகநாதன் நிருபா - வயது 6, அவரின் தாயாரான சிவலோகநாதன் சுபோகினி - வயது 38 ஆகியோரே உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

பாடசாலைக்கு மகள்களை அனுப்புவதற்காக வீட்டின் முன்பாக - வீதியோரத்தில் அவர்களுடன் தாயார் பேருந்துக்காகக் காத்திருந்துள்ளார். அந்தச் சமயம் வவுனியாவில் இருந்து மன்னாரை நோக்கி அதிவிரைவாக பயணித்த ஹன்ரர் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்றவர்களை மோதித்தள்ளியது.

ஹன்ரரின் ரயருக்குள் அகப்பட்டு தாயும் ஒரு மகளும் நசியுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றொரு மகள் வேகமாக வந்த ஹன்ரரரை கண்டதும் வளவுக்குள் ஓடியதால் தப்பினார் என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய ஹன்ரர் வாகனம் அங்கிருந்து தப்பிச் செல்ல முனைந்த நிலையில் அங்குநின்றவர்கள் அதனைத் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்தனர். வாகனத்தில் மூவர் இருந்த நிலையில் ஒருவர் தப்பியோடியுள்ளார். ஏனைய இருவரையும் பிடித்த மக்கள் அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனிடையே, விபத்தை ஏற்படுத்திய ஹன்ரரை மக்கள் சேதப்படுத்தியதுடன், அதனை எரியூட்டவும் முயன்றதால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது. எனினும், பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்த விபத்தால் வவுனியா - மன்னார் வீதியில் சில மணி நேரம் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் பறனாலயங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

## அடையாள...

பேச்சு மூலம் பிரச்னைகளுக்கு தீர்வு காண தயாராக உள்ளோம். பலவந்தமான முறையில் எவருக்கும் இடமளிக்க முடியாது - என்று கூறியிருக்கிறார் சரத் வீரசேகர எம். பி.

நேற்று மஹகர பகுதி யில் நிகழ்வு ஒன்றில் பங் கேற்றபோது செய்தியா ளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதால் நாடு முழுவதும் பௌத்த சின்னங்கள் மற்றும் மரபுரிமைகள் காணப்படுகின்றன. வடக்கு - கிழக்கு மாகாணங்களை தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகளை அடிப்படையாக கொண்டு எவ்வித முரண்பாடுகளும் தோற்றம் பெறவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை அந்த மாகாணங்களின் அரசியல்வாதிகள் தமது அரசியல் தேவைக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள். அரசியல்வாதிகளின் அனுசரனையுடன் தொல்பொருள் மரபுரிமைகள் அழிக்கப்படுகின்றன.

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி மற்றும் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட விடயம் பொய் என்பதை தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுர மானதுங்க தெளிவுபடுத்தவில்லை.

குருந்தூர் மலையில் தமிழர்கள் விவசாயம் செய்தனர் என்று தமிழ்த் தரப்பு குறிப்பிட்ட கருத்துகளை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றும் கூறினார். (ஐ)

## அரசியல்...

தெரிவித்தார்.

குருந்தூர்மலை விகாரைக்காக காணிகள் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பு தொடர்பில் அண்மைநாட்களாக பலத்த விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த நிலையில், கடந்த புதன்கிழமை பெரமுன கடசியினர் ஜனாதிபதியை சந்தித்தனர்.

இதன்போது ஜனாதிபதிக்கு தாம் கூறியவை என்று சாகர காரியவசம் கூறிய விடயங்கள் வருமாறு,

பௌத்த மதத்தை பாதுகாக்கும் பொறுப்பு அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.ஆகவே அந்த பொறுப்பில் இருந்து எவரும் விலக முடியாது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் சின்னங்களை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் அரசியல் செய்கிறார்கள்.

சாதாரண மக்கள் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்காத போதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் மக்களை தவறாக வழிநடத்துகிறார்கள். குறுகிய அரசியல் இலாபத்தை முன்னிலைப்படுத்தி தொல்பொருள் விவகாரத்தில் தீர்மானம் எடுக்க இடமளிக்க முடியாது.

குருந்தூர் மலை விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம் என்பதை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்துகிறோம். குருந்தூர் மலை விவகாரத்தில் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளுக்கு அமைய செயலபடுவது அத்தியாவசியமானது - என்றார். (ஐ)

## ஜெயவர்தனபுர...

வலையில் ஜெய வர்த்தனபுர பல்கலைக் கழத்தால் வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்ட மாணவர் விடுதியின் தரைத் தளத்திலேயே தூக்கில் தொங்கிய நிலையில் மாணவன் சடலமாக காணப்பட்டார்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் விடுதியின் மேல் தளத்தில் உறங்கிக் கொண்டிருந்த மாணவன் ஒருவர் கீழே வந்தபோது தூக்கில் தொங்கிய நிலையில் சடலத்தை கண்டு ஏனையோருக்கு தெரியப்படுத்தினார்.

பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர். மரண விசாரணைகளை மஹரகம மரண விசாரணை அதிகாரி எச். எம். டக்ளஸ் ரூபசிறி நடத்தினார்.

நுகேகொடை குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரும் விசாரணைகளை நடத்தினர். நீதிவானும் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினார்.

இதனிடையே, மாணவனின் மரணத்துக்கான காரணம் தெரியவரவில்லை. எனினும், மாணவனின் மரணம் தொடர்பில் முழுமையான விசாரணை வேண்டும் என்று அவரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## இந்தியா...

பின்னர் துறைமுக முனையத்தை திறந்து வைத்து உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காங்கேசன்துறையில் 25 கோடி ரூபாய் செலவில் பயணிகள் முனையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்குமான உறவு மிகவும் பலமானது. இரு நாடுகளுக்கும் இடையில் கலாசார ரீதியான உறவுகள் மேலும் பலமடைய வேண்டும். இதற்கான வாய்ப்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான கப்பல் சேவை ஆரம்பம் அமைந்துள்ளது.

எனினும், இந்தியா - காங்கேசன் துறை இடையே பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க இன்னும் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. அது இந்தஆண்டு டிசெம்பருக்கு முன்னர் பூர்த்தியாகாது. எனினும், இரு நாடுகளுக்கும் இடையிலான கப்பல் சேவையை அடுத்த வருடத்திலாவது ஆரம்பிக்க வசதிகள் செய்யப்படும் - என்றும் கூறினார். (ஐ-03)

# உண்மைகளை மக்களுக்கு அரசு வெளிப்படுத்த வேண்டும்!

## எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, ஜூன் 17

தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனவே இனியாவது அரசாங்கம் நாட்டு மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வாக, சர்வதேச நாணய நிதியத்துக்கு சென்று நாட்டுக்கு நன்மை பயக்கும் உடன்படிக்கையை மேற்கொள்ளும் பேச்சு நடத்தும் யோசனையை ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட் டணி என்பனவே முதன் முதலில் முன்வைத்தன.

எனினும், தற்போதைய அரசாங்கம் தாமதமாகச் சென்று நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலும் மக்களுக்கு பாதகம் விளைவிக்கும் வகையிலும் பல வீனமான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் ஒப்பந் தத்தில் கைச்சாத்திடும் பொறுப்பற்ற செயற்திட்டத்தினால் பாரிய பாதகமான நிலை உருவாகியுள்ளது.

நாட்டின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதாகக் கூறி, நாட்டை வங்குரோத்தடையச் செய்த கொள்ளையர்களை அரசாங்கம் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது.

அவர்களுக்கு சுகபோகம் அனுபவிக்க இடமளித்து, தாமும்சுகபோகம்அனுபவித்து சர்வதேச நாணய நிதியத்துடன் தோல்வியுற்ற ஒப்பந்தத்தை எட்டியுள்ளனர் - என்றார்.

## வரியில்...

கொள்வதாக அனைத்து தொழில் சங்கங்களின் ஒன்றியத்துக்கு அரசாங்கம் வாக்குறுதி வழங்கியுள்ளதாக அந்தச் சங்கத்தின் செயலாளர் ஹரித் அழுத்கே தெரிவித்துள்ளார்.

இந்த மாதத்துக்குள் வரி கொள்கையில் திருத்தம் ஒன்றை மேற்கொள்வதாக அரசாங்கம் தொழிற்சங்கங்களின் ஒன்றியத்துக்கு வாக்குறுதி அளித்திருந்தது. வாக்குறுதியை மேலும் தாமதிப்பதனால் விசேட மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் பல்வேறு துறைசார்ந்த தொழில் வல்லுநர்கள் நிரந்தரமாகவே நாட்டை விட்டு செல்லும் அபாயம் இருந்து வருகிறது.

நாட்டுக்கும் தொழில் வல்லுநர்களுக்கும் பொருத்தமான வரி திருத்தம் ஒன்றை இந்த மாதத்தில் மேற்கொள்வதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்தாலும் 16 நாட்கள் கழிந்துள்ளபோதும் அது தொடர்பில் தீர்மானம் ஒன்றையோ அறிவிப்பையோ மேற்கொள்ளாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுக்காமல் இருப்பதன் மூலம் நாட்டுக்கு மனித வள முகாமைத்துவம் தொடர்பாக மீள நிரப்ப முடியாத பெரும் பாதிப்பு ஏற்பட்டுவருகிறது. அது மருத்துவ துறை யில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

நாட்டில் இருக்கும் தொழில் வல்லுநர்கள் மற்றும் அனைத்து துறைகளின் மனித வங்களை பாதுகாத்து, வரி திருத்தத்தை மேற்கொள்ள ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த வாரம் பெரும் பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## சென்னையிலி...

கப்பல் வந்தது.

இந்தக் கப்பலை விமானசேவைகள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா, கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஆகியோர் உட்பட பல அதிகாரிகள் வரவேற்றனர். (ஐ-03)

## தமிழ்...

றார். மாகாண சபை முறைமையையும் இல்லாது ஒழிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

சரத் வீரசேகர இராணுவத்தில் ரொட்டி சுட்டுக் கொண்டா இருந்தார். ஏனெனில், எங்கள் மக்களின் பிரச்னை என்பது காலம்காலமாக இருந்து வரும் பிரச்னை. தங்களின் பிரச்னைகளை பேசுவதற்கே மக்கள் தமது பிரதிநிதிகளை பாராளுமன்றம் அனுப்புகிறார்கள். தங்களுக்கான அநீதிகளை சுட்டிக்காட்டும் வழியிலும்தான் பாராளுமன்றம் அனுப்புகிறார்கள். அந்தவகையில் தங்கள் தேசத்து மக்களின் பிரச்னைகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுகிறார்கள். இவர் யார்? - தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறையில் அடைக்க சொல்வதற்கு இவருக்கு என்ன உரிமை இருக்கிறது? முடிந்தால் அதை செய்து பார்க்கட்டும். சும்மா இராணுவத்தில் இருந்து எதையெல்லாமோ செய்து போட்டு வந்து கொக்கரிக்கக் கூடாது.

அவருக்கு சவால் விடுகின்றேன். மக்கள் நலன் சார்ந்து பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்யுங்கள் பார்க்கலாம். அடுத்து என்ன நடக்கும் என்று பார்ப்பீர்கள் - என்றார்.

## வாகனங்கள்...

ஒரே நேரத்தில் சுமார் 7.5 முதல் 8 கோடி டொலர்களை கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டுள்ளது.

அதனை சந்தை மற்றும் மத்திய வங்கியிடம் இருந்து கொள்வனவு செய்தது. இதனால், டொலரின் பெறுமதி சற்று அதிகரித்தது. நம் நாட்டில் சிலர் டொலரில் முதலீடு செய்கின்ற நிலையில் அவர்களும் டொலரை கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளனர். இவற்றின் விளைவாகவே டொலரின் பெறுமதி 320 ரூபாயாக எகிறியது.

அத்துடன், நேற்று (நேற்று முன் தினம்) மீண்டும் 306 ரூபாய் என்ற நிலைக்கு வந்ததையும் பார்த்தோம். இது ஓர் அசாதாரணமான சூழ்நிலை அல்ல, தேவை மற்றும் விநியோகத்தின் அடிப்படையில் நிகழும் சாதாரண ஒரு விடயம்.

எனினும், தற்போதைக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்க முடியாது - என்றார். (ஐ)

## யாழ். விமான...

செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. பெரியளவிலான விமானங்கள் வந்து இறங்க வசதியாகவே இந்த விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.

அத்துடன், தற்போது சேவையில் அதிக ஆசனங்கள் கொண்ட விமானங்களை சேவையில் ஈடுபடுத்தவும், யாழ்ப்பாண மக்கள் இலகுவான முறையில் பயணத்தை மேற்கொள்வது தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டன.

இதேநேரம், மக்களின் காணிகளை மேலும் சுவீகரிக்காமல் விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாணத்திற்கான விமான நிலைய உயர் அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# உயர்தரப் பரீட்சை இனி டிசெம்பரில்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 17

வருடாந்தம் உயர்தரப் பரீட்சையை டிசெம்பர் மாதத்தில் நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளை கொண்டுவர எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் தேசிய கல்வியற் கல்லூரிகளில் பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

உயர்தரப் பரீட்சையை குறிப்பிட்ட ஒரு மாதத்தில் நடத்துவதற்கான சட்ட ஏற்பாடு ஒன்று கொண்டு வரப்பட வேண்டும்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு மீண்டெழத் தொடங்கியுள்ளது.

ஏற்றுமதி பொருளாதார இலக்கினை கொண்டே எதிர்காலத்தில் நாட்டை முன்கொண்டு செல்ல முடியும். ஏற்றுமதி பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதிய கல்வி திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

புதிய கல்வி திட்டம் தொடர்பில் ஆராய குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கையை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் எதிர்பார்த்துள்ளோம்.

13 வருடங்கள் மாணவர்களுக்கு கட்டாய கல்வி அவசியமாகும். எதிர்காலத்தில் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதா? இல்லையா? என்பது குறித்து ஆராயப்படும்.

ஏனைய நாடுகளைப் போன்று எமது கல்வித்திட்டத்தையும் மேம்படுத்தும் வகையில் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும் - என்றார்.

உயர்தரப் பரீட்சையை குறிப்பிட்ட ஒரு மாதத்தில் நடத்துவதற்கான சட்டம் கொண்டுவரப்படும் எனவும், உரிய அவசியம் இன்றி அந்த பரீட்சையை மாற்றுவதனால் அதற்கு பாராளுமன்ற அனுமதி அவசியம் ஏற்படும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அவுஸ்திரேலியாவுக்கு ஆள்கள் கடத்தல் கடற்படை, இராணுவ சிப்பாய்கள் கைது!

## குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதிரடி

கொழும்பு, ஜூன் 17

**கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு ஆட்கடத்தலில் ஈடுபட்டு பல கோடி ரூபா சம்பாதித்த கடற்படை மற்றும் இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்றை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.**

சந்தேகநபர்களில் சம்பூர் பகுதியில் உள்ள கடற்படை முகாமின் சிப்பாய் ஒருவரும், இராணுவச் சிப்பாய் ஒருவரும் அடங்குவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பணக்கார தமிழ் வர்த்தகர் மற்றும் ஒரு பெண் உட்பட ஆறு பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 4ஆம் திகதி இருபது பேர் கொண்ட குழுவொன்று சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு பயணம் செய்ய முற்பட்டபோது பொலிஸாரால் பிடிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம், வர்த்தகம், கடத்தல் மற்றும் கடல்சார் குற்றப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

இந்த ஒழுங்கமைக்கப்பட்ட கும்பலைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரிய வந்த தகவலின் அடிப்படையில் கடற்படை மற்றும் இராணுவச் சிப்பாய்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டபோது சிக்கியவர்களிடம் இருந்து மூன்று கோடி இருபது இலட்சம் ரூபாவை இந்த கும்பல் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

அந்த பணத்தில் இராணுவ சிப்பாய் 70 இலட்சம் ரூபாயும், கடற்படை சிப்பாய் பத்து இலட்சம் ரூபாயும் பெற்றுள்ளமை தெரியவந்தது.

பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட இந்த ஒழுங்கமைக்கப்பட்ட கும்பலுடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட உள்ளனர். (அ)

# மருந்துகள் விலை குறைப்பு!

கொழும்பு, ஜூன் 17

நாட்டில் 60 விதமான மருந்துகளின் விலைகள் 1 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன. இதற்கான வர்த்தமானி அறிவித்தலை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளியிட்டுள்ளார்.

குறித்த விலைக் குறைப்பு எதிர்வரும் 26ஆம் திகதி முதல் அமுலுக்கு வருமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதியின் உரை குறித்து பாராளுமன்றில் விவாதம்!

கொழும்பு, ஜூன் 17

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரைமீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் எதிர்வரும் 22ஆம் திகதி நடத்த பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு தீர்மானித்துள்ளது என்று பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானீ ரோஹணதீர தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை பாராளுமன்ற அமர்வுகளை நடத்த தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட விமானி மரணம்

கொழும்பு, ஜூன் 17

நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ரஷ்ய விமான சேவையின் துணை விமானி திடீர் சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 12ஆம் திகதி ரஷ்ய விமானத்தில் இலங்கை வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விமானி நேற்று மீண்டும் நாடு செல்ல இருந்த நிலையில் நேற்று முன் தினம் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். (அ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 07 . 1945



இறப்பு 14 . 06 . 2023

## திருமதி நாகராசா தவயோகம்

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகராசா தவயோகம் கடந்த 14.06.2023 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து – தெய்வானை தம்பதியரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற காலஞ்சென்ற செல்லர் – முத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் செல்லர் நாகராசாவின் அன்பு மனைவியும் சந்திரகுமார் (சுவிஸ்), செல்வக்குமார், கிசோக்குமார்(லண்டன்), மங்களேஸ்வரி, சுசீகலா(லண்டன்) சசிகுமார் (யாழ்ப்பாண தபால் உத்தியோகத்தர்) டயானி, ராகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தராசா, சிவபாலன்(லண்டன்), காமினி தெய்வேந்திரம், நிஷந்தன் பரிமளாதேவி(சுவிஸ்), செல்வநாயகி, கௌசலா (லண்டன்) விஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் செல்லத்தம்பி, காலஞ்சென்றவர்களான பொன்ராசா, இரத்தினம் மற்றும் தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 48 காதி அபூபக்கர் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு – 077 669 1279

# வலி.வடக்கு காணி அளவீடு குறித்து மக்கள் பரபரப்படைய தேவையில்லை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

வலி வடக்கில் உள்ள தனியார் காணிகளை சட்ட ரீதியாக மக்களிடம் கையளிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ள காணி அளவீடுகள் தொடர்பில் மக்கள் பரபரப்படையத் தேவையில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூற்றாண்டுச் சின்னத்தினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2013 ஆண்டு இராணுவத்தினரின் பயன்பாட்டிற்காக அரசுடமையாக்கும் நோக்கில் வர்த்தமானி வெளியிடப்பட்ட சுமார் 6300 ஏக்கர் காணிகளில் கணிசமானவை தற்போது விடுவிக்கப்பட்டு காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும், குறித்த காணிகள் சட்ட ரீதியாக அரச காணிகளாகவே இப்போதும் காணப்படுகின்றமையினால், 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சட்ட வர்த்தமானியை மீளப் பெறுகின்ற வகையில் புதிய வர்த்தமானி வெளியிட வேண்டியிருக்கின்றது.

இதுதொடர்பாக, அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் விரிவாக கலந்துரையாடிய நிலையில், 2013 வர்த்தமானியை மீளப்பெறுவதற்கும், தற்போதும் விடுவிக்கப்படாமல் இருக்கின்ற காணிகளில் முடிந்தளவு காணிகளை விடுவிப்பதற்கும் காணி அளவீடுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே காணி அளவீடுகள் மேற்கொள்ளப்படும் போது மக்கள் பரபரப்படையத் தேவையில்லை.

அதேபோன்று, போதைப் பொருள் பாவனை மற்றும் சமூகச் சீர்கேடுகள் எங்களுடைய சமூகத்தில் அச்சுறுத்தும் விவகாரமாக மாறியிருக்கின்றது. இதிலிருந்து எமது சமூகத்தை பாதுகாக்க வேண்டிய பாரிய சமூகக் கடமை எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றிருந்தது. குறித்த கலந்துரையாடலில் எமது சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டு தங்களின் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். அவ்வாறு கருத்து வெளியிட்டவர்களில் பெரும்பாலானவர்கள் எமது பிரதேசத்தில் புனர்வாழ்வு மையம் ஒன்றினை அவசியத்தினை வலியுறுத்தி இருந்தனர். என்னுடைய நிலைப்பாடும் அதுவாகவே இருக்கின்ற நிலையில், குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளேன்.

இந்நிலையில், இங்கு கூடியிருக்கின்ற ஆசிரிய மாணவர்களும் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். அதாவது நீங்கள் எல்லோரும் கற்றல் கற்பித்தல் என்பதற்கு அப்பால், எமது சமூகத்தை ஆரோக்கியமாக முன்கொண்டு செல்வதற்கான விழிப்புணர்வு மற்றும் தெளிவூட்டல் முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும் ” -என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.